பூவுலகின் நண்பர்கள் வெளியீடு | www.poovulagu.org |ஜூன் 2024 | ரூ.30

# பூவுலகு

சுற்றுச்சூழலுக்கான மாத இதழ்



**அதிகரிக்கும் வெப்ப அலை**
**அலட்சியப்படுத்தும் அரசு**



## மீனவர் வாழ்வாதாரத்தை அழிக்கும் ‘காக்கா ஆழி’

# தமிழ்நாட்டில் **மே** மாதத்தில் **40°C** மேல் வெப்பநிலை பதிவான நாட்கள்

*வெப்பநிலை °C-இல் உள்ளது.



**வேலூர்**
1st-**41.6**, 2nd-**43.7**, 3rd-**43.6**, 4th-**42.5**, 5th-**43.2**, 6th-**42.1**, 7th-**42.6**, 8th-**40.5**, 11th-**40**, 13th-**40.2**, 29th-**40.2**

**சேலம்**
1st-**40.8**, 2nd-**41.5**, 3rd- **42.2**, 4th-**40.5**, 5th-**40.4**, 6th-**41**, 7th-**40.8**

**ஈரோடு**
1st-**42.2**. 2nd-**43.6**, 3rd-**44**, 4th-5th-6th: **43.4**, 7th-**43.2**, 9th-**41**, 10th- **41.4**, 8th-13th: **40.8**, 11th, 12th-**40**

**நாமக்கல்**
1st-**40**, 2nd-**41**, 3rd-**42**, 4th-**40**, 5th-**40.5**, 6th- **40.5**, 7th-8th: **40**

**திருச்சிராப்பள்ளி**
1st-**41.3**, 2nd-**43.1**, 3rd- **42.7**, 4th-**40.7**, 5th-**42.1**, 6th-**41.7**, 7th-**42.7**

**கரூர்**
1st-**42.5**, 2nd-**44**, 3rd-**44.3**, 4th-**42.5**, 5th-7th: **43.5**, 6th- **43.8**, 8th-10th: **41.5**, 9th-**41.2**

**மதுரை**
1st-**40.2**, 2nd-**41.4**, 3rd-**42**, 4th-**41.2**, 5th-**41**, 6th-**40**, 7th- **40.8**, 8th-**41.2**, 31st-**40**

**மதுரை விமான நிலையம்**
1st-**40.6**, 2nd-**41.4**, 3rd-**41.7**, 4th-**40.1**, 5th-**41.1**, 6th-**41.8**, 7th-**42.2**, 8th-**41.7**

**சென்னை**
28th-**40.6**, 29th-**41.1**, 30th- **40.4**, 31st-**40.1**

**திருத்தணி**
1st-**40.2**, 2nd-**42.5**, 3rd-**42.3**, 4th-**42.5**, 5th-**41.4**, 6th-**41.7**, 7th-**41.6**, 8th-**40.1**, 29th-**40.2**, 31st-**42.5**

**சென்னை விமான நிலையம்**
2nd-**40.7**, 3rd-**40**, 4th-**40.2**, 5th-**40.1**, 28th-**40.6**, 29th-**41.3**, 30th-**41.6**, 31st-**41.9**

**தருமபுரி**
1st-**40.2**, 2nd-**43.6**, 3rd- **44**, 4th-**40.2**, 5th-**41.2**, 7th-**40**

**கடலூர்**
2nd-**40.2**, 31st- **40.1**

**நாகப்பட்டினம்**
5th-**40.3**

**தஞ்சாவூர்**
1st-**40**, 2nd-**41**, 3rd-**42.2**, 4th- **42**, 5th-**40**, 6th-**42.2**, 7th-**40**, 8th-**40**

**திருநெல்வேலி**
2nd-**40**, 3rd-**40.5**, 4th- **40.2**, 5th-**40.6**, 6th-**41**, 7th-**41.2**, 8th-**41.5**

தகவல்: சென்னை மண்டல வானிலை ஆய்வு மையம்

வரைபடம் : துரை, பூவுலகின் நண்பர்கள்.

**பூவுலகு**
சுற்றுச்சூழலுக்கான மாத இதழ்

ஆசிரியர்
**கோ.சுந்தர்ராஜன்**

கௌரவ ஆசிரியர்
**மருத்துவர் கு.சிவராமன்**

நிர்வாக ஆசிரியர்
**கவிதா முரளிதரன்**
**சதீஷ் லெட்சுமணன்**

இணை ஆசிரியர்
**வழக்கறிஞர் சுந்தரராஜன்**

ஆசிரியர் குழு
**வழக்கறிஞர் மு.வெற்றிச்செல்வன்**
**ஜீயோ டாமின்**

மின்மினி ஆசிரியர்
**கோ.ராஜாராம்**

இதழ் ஒருங்கிணைப்பாளர்
**பார்த்திபன்**

இதழ் வடிவமைப்பு
SAI CREATIVE

**பூவுலகின் நண்பர்கள்**
எண் 72, 3ஆம் குறுக்குத் தெரு, அஞ்சுகம் நகர்,
மேற்கு ஜாபர்கான்பேட்டை, சென்னை - 600083
தொடர்புக்கு: 90949 90900
இணையம்: www.poovulagu.org
வலைப்பூ: www.poovulagu.net
முகநூல்: www.facebook.com/poovulagu
மின்னஞ்சல்: info@poovulagu.org (நிர்வாகம்)
editor@poovulagu.org (ஆசிரியர் குழு)

**ஆண்டுச்சந்தா: ரூ.350**

**வங்கிக் கணக்கு**

**POOVULAGIN NANBARGAL,**
KVB Anna nagar,
A/c No: 1154 135 00000 4357,
IFSC: KVBL 000 1154

# ஆசிரியர் பக்கம்

மற்றுமொரு மே 22 கடந்திருக்கிறது. முத்துநகரின் மூச்சுக் காற்றைக் காத்திட நச்சு ஸ்டெர்லைட் ஆலையை எதிர்த்து அறவழியில் போராடி சுவாசக் காற்றைப் பலியாகக் கொடுத்த தோழர்களை நினைவு கூர்வோம். ஆலையை இனித் திறக்க முடியாது என்பதை உச்சநீதிமன்றமே உறுதி செய்துவிட்டது. இனி வேதாந்தாவுக்கு ஆலையைத் திறப்பதற்கான சட்ட வழிகள் எதுவுமில்லை.

துப்பாக்கிச் சூட்டில் பலியானவர்களுக்கு நிவாரணமும் வழங்கப்பட்டுவிட்டது. ஆனால், முழுமையான நீதி இன்னும் வழங்கப்படவில்லை. துப்பாக்கிச் சூட்டிற்குக் காரணமான காவல்துறை, வருவாய்த் துறை அதிகாரிகள் ஒருவருக்குக் கூட இன்னும் தண்டனை கிடைக்கவில்லை. ஆலையின் உள்ளேயும் ஆலைக்கு வெளியேயும் ஸ்டெர்லைட் ஆலையால் கையாளப்பட்ட இரசாயன நச்சுக் கழிவுகள் இன்னும் அகற்றப்படவில்லை.

அக்கழிவுகள் அனைத்துமே நச்சுத்தன்மை வாய்ந்தவை என்பதை கருத்தில்கொள்ள வேண்டும். கழிவுகளை முழுமையாக அகற்றி ஆலையை ஒட்டுமொத்தமாக அப்பகுதியிலிருந்து இடித்து அகற்ற வேண்டும். சுற்றுச்சூழலிலும் மக்கள் உடல்நலத்திலும் பாதிப்பு ஏற்படுத்தியதற்கான இழப்பீட்டை வேதாந்தா நிறுவனத்திடமிருந்து வசூலிக்க வேண்டும். துப்பாக்கிச்சூடு தொடர்பான வழக்கு விசாரணை விரைந்து நடத்தி குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத்தர வேண்டும். அதுதான் உயிரிழந்தவர்களுக்கும் தூத்துக்குடி மக்களுக்குமான நீதியாகும்.

# “புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தி மட்டுமே காலநிலை மாற்றத்தைத் தடுப்பதற்கான ஒரே தீர்வல்ல”

அருகி வரும் பறவையான கானமயிலின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் அவற்றின் வசிப்பிடங்களில் தலைக்கு மேல் செல்லும் உயரழுத்த மின்தடங்களுக்கு விதிக்கப்பட்ட தடையுத்தரவை உச்ச நீதிமன்றம் தளர்த்தியிருந்தது. இது தொடர்பாக உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி சந்திராசூட் மற்றும் நீதிபதிகள் பர்திவாலா, மனோஜ் மிஷ்ரா ஆகியோர் கொண்ட அமர்வு மார்ச் 21, 2024ல் சில உத்தரவுகளைப் பிறப்பித்தது. அந்த உத்தரவில் கானமயில்களுக்காக புதைவடக் கம்பிகளை மாற்றினால் இந்தியாவின் காலநிலை மாற்றத்திற்கு எதிரான நடவடிக்கைகள் தடைபடும், எந்த நடவடிக்கைகளும் எடுக்காமல் விட்டால் கானமயில் போன்ற அழியும் தருவாயில் இருக்கும் உயிரினங்களை இழக்க நேரிடும் என்கிற இரண்டையும் சமநிலையில் நிறுத்திப் பார்த்தது உச்ச நீதிமன்றம்.

இத்தீர்ப்பின் மற்றொரு அம்சம் என்னவென்றால் காலநிலை மாற்றம் மனிதர்கள் மற்றும் சுற்றுச்சூழலில் ஏற்படுத்தும் தாக்கம் குறித்து விரிவாக அலசப்பட்டிருப்பதுதான். குறிப்பாக சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதை வலியுறுத்தும் அரசியலமைப்பின் பிரிவு 14 மற்றும் உயிருக்கும் உடல்சார் உரிமைக்கும் பாதுகாப்பு வழங்கும் அரசியலமைப்பின் பிரிவு 21 ஆகிய இரண்டின் அடிப்படையில் காலநிலை மாற்றத்தின் பாதகமான விளைவுகளில் இருந்து விடுபட அனைவருக்கும் உரிமை இருப்பதாக உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது. இது ட்தொடர்பான விரிவான கட்டுரை ஏப்ரல் மாத பூவுலகு இதழில் “கானமயிலும் இந்தியாவின் உமிழ்வில்லா நிலை இலக்கும்” எனும் தலைப்பில் வெளியாகியிருந்தது.



இத்தீர்ப்பு குறித்து அசர் அமைப்பு ஒரு இணையக் கருத்தரங்கை மே 23ஆம் தேதி ஒருங்கிணைத்திருந்தது. அதில், சூழலியல் சட்டம் மற்றும் கொள்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு வரும் காஞ்சி கோலி, வழக்கறிஞர்கள் ரித்விக் தத்தா, மனு சேஷாத்ரி ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரையாற்றினர். அக்கருத்தரங்கத்தில்



விவாதிக்கப்பட்ட கருத்துகளின் சுருக்கம் கீழே தொகுக்கப்பட்டுள்ளது.

**காஞ்சி கோலி:**

"உச்ச நீதிமன்றத்தின் இத்தீர்ப்பு காலநிலை மாற்றம் குறித்து நாம் விவாதிக்க வேண்டிய பல கோணங்களுக்கான வாய்ப்புகளை அதிகரித்துள்ளது. அதேநேரத்தில் காலநிலை மாற்றத்திற்கான தீர்வுகளை வெறும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி என்கிற வரையறைக்குள் சுருக்குகிறது. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மட்டுமே காலநிலை மாற்றத்திற்கான ஒரே நிவாரணி என நிறுவ முயல்கிறது. உணவு, சுகாதாரம், நீர் என காலநிலை மாற்றம் தொடர்பான பல பிரச்சனைகள் மற்றும் தீர்வுகள் உள்ளன என்பதை நாம் உணர வேண்டும்."

**மனு சேஷாத்ரி:**

"காலநிலை மாற்றம் என்பது நாம் சமகாலத்தில் எதிர்கொள்ளும் மிக முக்கியமான பிரச்சனையாகும். இதை ஒரு முக்கியப் பிரச்சனை என்பதை உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு அங்கீகரித்துள்ள வகையில் இது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பாகும். இந்திய அரசு தேசிய அளவிலான காலநிலை இயக்கம் ஒன்றைக் கொண்டுள்ளது. ஆனால், அவை அனைத்தும் வெறும் கொள்கை வடிவிலேயே மேலோட்டமாக உள்ளன. அவற்றைச் செயல்படுத்துவதற்கான திட்டங்கள் இல்லை. கொள்கைகள் அனைத்தும் சட்டமாக மாற்றப்பட்டால்தான் அது சாத்தியமாகும். கார்பன் வரி, கார்பன் வணிகம் போன்றவை நமக்கு அவசியம், இவை மூலம்தான் நாம் 2070ஆம் ஆண்டுக்குள் உமிழ்வில்லா நிலை எனும் இலக்கை அடைய முடியும். இந்த இலக்கை அடைவதற்கான முயற்சிகளில் பல துறைசார் நடவடிக்கைகள் மாநில அரசின் அதிகார வரம்பிற்குள் உள்ளன. அவை தேசிய செயல்திட்டத்தோடு ஒத்துப்போக வேண்டும். மற்ற நாடுகளில் இது செயல்பாட்டில் உள்ளது. நம் நாட்டிலும் இது வேண்டும்."



**ரித்விக் தத்தா:**

”உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் பெரும் பகுதிகள் அனைத்தும் ஒன்றிய அரசின் எரிசக்தி, புதுப்பிக்கத்தக்க மற்றும் புதிய எரிசக்தி, சுற்றுச்சூழல் வனம் மற்றும் காலநிலை மாற்றத்துக்கான அமைச்சகம் ஆகிய மூன்றும் இந்த வழக்கு தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட பதிலில் இருந்து எடுத்தாளப்பட்டது. இம்மூன்று துறைகளுமே இப்பிரச்சனையை கானமயில்களின் பாதுகாப்பு எனும் கோணத்தில் அணுகாமல் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி எனும் கோணத்தில் இருந்து



அணுக வேண்டும் எனக் கூறுகின்றனர். அரசியலமைப்பின் பிரிவு 14 சமத்துவம் குறித்துப் பேசுகிறது. காலநிலை மாற்றத்தின் தாக்கம் அனைவரையும் சமமாகப் பாதிப்பதில்லை என்பதை உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு விரிவாக அணுகியுள்ளது. ஆனால், இந்த வழக்கில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்திக்கும் கானமயில்களின் பாதுகாப்புக்கும் இடையே ஒரு சமன்செய்யும் வேலையை உச்சநீதிமன்றம் பார்த்துள்ளது. இந்த சமன்செய்தல் உச்ச நீதிமன்றத்தின் வேலை இல்லை. இந்த வழக்கில் வாதிட்ட ஒன்றிய அரசின் எரிசக்தி, புதுப்பிக்கத்தக்க மற்றும் புதிய எரிசக்தி, சுற்றுச்சூழல் வனம் மற்றும் காலநிலை மாற்றத்துக்கான அமைச்சகம் ஆகிய மூன்று அமைச்சகங்களும் நாம் நிலக்கரி பயன்பாட்டை கைவிட வேண்டும் எனக் கூறுகின்றன. ஆனால், நம் அரசு ஒரே ஒரு அனல்மின் நிலையத்தைக்கூட மூடுவதற்குத் தயாராக இல்லை என்பதே உண்மை. ஆனால், இந்த வழக்குதான் நிலக்கரியை ஒரு அசுத்தமான எரிசக்தி எனக் கூறும் முதல் சட்டப்பூர்வமான வாக்குமூலமாகும்.

கானமயில்களைப் பாதுகாப்பதற்கான வழக்கானது, ஒரு காலநிலை வழக்காக மாறியுள்ளது. இது அடிப்படையிலேயே காலநிலை வழக்குகளில் தாக்கத்தை ஏற்படுத்தும். காலநிலை சட்டம் நம்மிடம் இல்லை; ஆனால் இத்தீர்ப்பின் வாயிலாக அரசியலமைப்பின் பிரிவு 12 மற்று 14 மீறப்பட்டுள்ளதாக ஒரு காலநிலை சார்ந்த பிரச்சனையை நாம் பசுமைத் தீர்ப்பாயத்துக்கோ, நீதிமன்றத்துக்கோ கொண்டு செல்ல முடியும். உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பால் இதற்கான சாத்தியங்கள் கூடியுள்ளது. TERI அமைப்பு நடத்திய ஆய்வு ஒன்றில் 2030ஆம் ஆண்டுக்குள் புனேவில் 37% மழைப்பொழிவு அதிகரிக்கும் எனக்கூறப்பட்டுள்ளது. இதை அடிப்படையாக வைத்து ஆறுகளில் நடக்கும் மேம்பாட்டுத் திட்டங்களை எதிர்த்து பலரும் நீதிமன்றத்தை நாடியுள்ளனர்.

அலையாத்திகள் என்னை கடல்மட்ட உயர்வு மற்றும் வெள்ளத்தில் இருந்து பாதுகாக்கும். ஆகையால் அதை அழிக்கக் கூடாதென நான் நீதிமன்றத்தை நாட முடியாது. ஆனால், அதே அலையாத்திகள் CRZ மண்டலத்திற்குள் இருந்தால் நான் சட்டப்பூர்வமாக அதன் அழிவைத் தடுக்க முடியும். இந்த இடைவெளியை நாம் குறைய வேண்டும்.” என்றார்.

**– செய்திக் குழு**



# நிலைத்த பொருளியல் - 2
# தனிமனிதர், சமூகம், பொருளியல்.

**தோழர் தம்பி**

நிலைத்த பொருளியலின் இந்தப் பகுதியில் மனிதர், தனிநபராக எவ்வாறு இயங்குகிறார் என்பதைக் குமரப்பா எழுதுகிறார். நாம் சில நேரங்களில் சில மனிதர்கள் இவ்வாறு பேசுவதைக் கேட்டிருப்போம்: “அவர் கூட்டத்தோட சேர்ந்தால்வேறமாதிரிநடந்துகொள்கிறார்...” உண்மையில் ஒரு மனிதர் தனியாக இருப்பதற்கும் கூட்டத்தில் ஒருவராக இருப்பதற்கும் பல வேறுபாடுகளை நாம் பார்க்கிறோம். குமரப்பா தனது நிலைத்த பொருளியலில் இந்த ஈர்மறையின் அடிப்படையில்தான் தனது வாதத்தை முன்வைக்கிறார். இந்தக் கட்டுரையில் தனிநபரானவரின் வாழ்வினை வரையறையாகக் கொண்டு குமரப்பா வரையறுத்த பொருளியலைப் பார்ப்போம்.

மனிதனுக்கும் மற்ற விலங்குகளுக்கும் உள்ள அடிப்படை வேற்றுமை என்னவென்று கேட்டால் ஆறாம் அறிவு என்று நாம் எல்லாரும் பள்ளியில் படித்திருப்போம். இந்த ஆறாம் அறிவை சமூகப் பொருளியல் தளத்தில் வைத்துப் பார்த்தால் அதுவே *Freewill* என்பதற்கு அடிப்படையாக உள்ளது. மனிதனுக்கு விலங்குகளைவிட விடுதலை என்பது குறைவானது என்று அமைப்பியல் ரீதியான காரணிகளை (அரசு, சமூகம், குடும்பம்) கொண்டு நாம் பேசலாம். ஆனால், குமரப்பா சற்று வேறுபட்டு நிற்கிறார்.

*“The main trouble with the man arises out of the fact that he is endowed with a ‘Freewill’*

**அறியப்படாத குமரப்பா பாகம் -6**

Development என்கிற ஆங்கிலச் சொல்லுக்கு நிகரான தமிழ்ச் சொல் எனக்குத் தெரியாத காரணத்தால், மிகவும் கவனத்தோடு நான் வளர்ச்சி என்ற சொல்லைப் பயன்படுத்துகிறேன்.

*and possesses a wide field for its play. By exercising this gift in the proper way he can consciously bring about a much greater cooperation and coordination lf nature's units than any other living being. Conversely, by using it wrongly he can create quite a disturbance in the economy of nature and in the end destroy himself."*

இயற்கையின் பொருளியலானது மனிதனின் தனிவிருப்புகொள்கையால் மிகவும் பாதிப்புக்குள்ளாகிறது என்பதைக் குமரப்பா தெளிவாக எழுதியுள்ளார். அதே நேரத்தில் அதனை நாம் சரியாகப் பயன்படுத்தினால் இயற்கையோடு இணைந்து வாழ்வதில் மனிதன் தலைசிறந்தவனாகவும் மாற்றம் அடைவான் என்பதையும் அவர் வாதிடுகிறார். மனிதனின் தனிவிருப்புக் கொள்கையின் பயன்பாட்டைக் குமரப்பா ஐந்தாம் அத்தியாயத்தில் எடுத்துரைக்கிறார். அதில் கவனிக்கவேண்டியது பசி மற்றும் கற்பனை குறித்துக் குமரப்பா கூறுவதுதான். பசித்தவுடன் உண்ணவேண்டும் என்பதை ஆதிகாலம் தொட்டு நம்மாழ்வார் வரை பேசினாலும் குமரப்பா, மனிதன் சுவையினை அடிப்படையாகக் கொண்டு உணவருந்தி வாழ்தலினால் இயற்கையின் பொருளியலானது மிகுந்த பாதிப்புக்குள்ளாகும் என்பதை எடுத்துரைக்கிறார். பல இடங்களில் குமரப்பா இதனோடு பொருந்திய எடுத்துக்காட்டுகளை எடுத்துரைக்கிறார். மனிதன் படைப்பாற்றலினால் கடவுளுக்கு அடுத்தபடியாக நிற்பதாகக் குமரப்பா எழுதுகிறார். மனிதர் சுகத்தினை அடிப்படையாக வைத்து மேற்கொள்ளும் பொருளியலானது அவனது *Surplus* ஆற்றலை தின்றுவிடுவதாக அமைகிறது. இந்த ஆற்றலை மனிதரால் பிறரின் மகிழ்விற்கும் நலத்திற்கும் பயன்படுத்தினால் அவரே உயர்ந்த மனிதர் (*Noblest Faculty Man*) என்று குமரப்பா வாதிடுகிறார்.

*Development* என்கிற ஆங்கிலச் சொல்லுக்கு நிகரான தமிழ்ச் சொல் எனக்குத் தெரியாத காரணத்தால், மிகவும் கவனத்தோடு நான் வளர்ச்சி என்ற சொல்லைப் பயன்படுத்துகிறேன். மானுட வளர்ச்சியை இரண்டு வழிகளில் நாம் அணுகலாம். குமரப்பா அந்த இரண்டு வழிகளைப் பல்வேறு கட்டங்களாக விவரிக்கிறார். இதில் முதல் வழியானது மானுட வளர்ச்சியைத் தனிநபரின் அடிப்படையில் காண்பது. ஒரு மனிதர் அவர் வாழ்நாளில் அடையும் வளர்ச்சியினை அவரது பொருளியல் செயல்பாடுகளை வைத்து எடுத்துரைக்கிறார். இதற்கான வரையறையாக அவர் ஏற்கனவே கொடுத்த ஐவகைப் பொருளியலில் எடுத்து எழுதுகிறார்.

**பொருளியல் வகை அதன் இயல்பு அதன் செயல்**

ஒட்டுண்ணிப் பொருளியல் பேராசை கொண்ட தன்னலத்தால் வருவது மூலத்தினை அழித்தல் (*Destruction of Source*)



*கொள்ளைப் பொருளியல் ஆசையினால் தூண்டப்படுவது தன் பக்கத்திலிருந்து அளிக்காமல் எடுத்துகொள்வது.*

*நிறுவனப் பொருளியல் தன்னலத்தோடு அந்த உற்பத்தியில் பங்கீடும் சேர்ந்து அமைவது உற்பத்தியில் கடமையையும் பலனையும் இணைப்பது.*

*கூட்டப் பொருளியல் தன்னலமின்றிக் கூட்டத்திற்காக உழைத்து கொட்டுவது கூட்ட நலன் / பொது நலன் மட்டுமே நடுவப்படுத்துவது.*

*சேவைப் பொருளியல் தன்னலமின்றி உழைப்பது "தாயை" போலத் தன்னலம் பாராமல் உழைப்பது.*

இதுதான் குமரப்பா வரையறுத்த தனிநபர் பொருளியல் வளர்ச்சியின் பல்வேறு படிநிலைகள். ஆனால், இங்கே சிக்கல் என்னவென்றால் முதல் பகுதியிலும் இரண்டாம் பகுதியிலும் குமரப்பா கூட்டப் பொருளியலும் சேவைப் பொருளியலும் எவ்வளவு மாறுபட்டது என்பதைக் கூறவில்லை. இதனால் இரண்டிற்கும் இடைப்பட்ட கோடு இவ்விரண்டினைப் பிரிப்பதில் முரண்களைக் காண்கின்றனர். இதனை வைத்துப் பார்த்தால் குமரப்பா நாசிப் பொருளியலும் சோவியத் பொருளியலும் ஒன்று என்று கூறுவதோடு காந்தியப் பொருளியலும் இதனோடு சேரும் வண்ணமாகக் குழப்பங்களைச் செய்கிறார். இங்குதான் குமரப்பாவின் மற்ற நூல்களைப் படிக்க வேண்டிய தேவை உண்டாகிறது. குமரப்பா தனது பல நூல்களில் குறிப்பாக ஏன் கிராம இயக்கம்? என்னும் நூலில் வெறும் கோட்பாடுகளோடு நிற்காமல் செயல்முறையிலுள்ள மாறுபாடுகளை எடுத்துரைக்கிறார். ஏற்கனவே சொன்னது போல குமரப்பா முன்மொழிந்த காந்தியப் பொருளியலும் சோவியத் பொருளியலும் வேறுபடும் இடம் அதன் செயல்முறையிலும் நிறுவனத்திலும் உள்ளது.

குமரப்பா முன்மொழிந்த காந்தியப் பொருளியல் கீழிருந்து மேல்செல்லுவதாக இருக்கும் (bottom up). சோவியத் பொருளியலோ அல்லது நேருவின் பொருளியல் முன்னெடுப்போ மேலிருந்து கீழ் செல்லும் வண்ணமாக உள்ளது (top down). ஆனால் குமரப்பாவின் ரசியா, சீனா சுற்றுப் பயணங்களுக்குப் பிறகு இச்சிந்தனை நன்கு தெளிவடைந்து ஆழம்பெற்றதை இங்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

**விலங்கு நிலையானது பிறரின் துன்பத்தில் பொருளியலை மேற்கொள்வது. மனித நிலையானது தேசத்திற்கோ அல்லது வேறு சில கூட்டத்திற்கோ உழைத்துக் கொட்டுவது. ஆனால், மூன்றாவது நிலையில் சர்வோதயப் பொருளியலை எடுத்துரைக்காமல் மதம் சார்ந்த பொருளியல் என்று குறிப்பிட்டுள்ளார்.**

மானுட வளர்ச்சியினை அவர் அணுகிய மற்றொரு வழி கூட்டங்களாக. இதனை நாம் தேசங்கள் என்று கூட எடுத்துக் கொள்ளலாம். அதாவது மானுட கூட்டமானது தனிநபராக மேற்கொள்ளும் பொருளியல் சமூக அளவில் அல்லது தேசிய அளவில் அடையும் மாற்றங்களை அவர் இதில் குறிப்பிடுகிறார். இதன் பல்வேறு படிநிலைகள்:

**நிலைப் பொருளியல் எடுத்துக்காட்டு**

- *விலங்கு நிலை ஒட்டுண்ணி & கொள்ளை காலனியாதிக்கத்தின் பொருளியல்*
- *மனித நிலை நிறுவனம் & கூட்டம் சோவியத்தின் பொருளியல்*
- *உயர்ந்த நிலை சேவை மதம் சார்ந்த பொருளியல்*

விலங்கு நிலையானது பிறரின் துன்பத்தில் பொருளியலை மேற்கொள்வது. மனித நிலையானது தேசத்திற்கோ அல்லது வேறு சில கூட்டத்திற்கோ உழைத்துக் கொட்டுவது. ஆனால், மூன்றாவது நிலையில் சர்வோதயப் பொருளியலை எடுத்துரைக்காமல் மதம் சார்ந்த பொருளியல் என்று குறிப்பிட்டுள்ளார்.

மதிப்பு என்பது எந்த ஒரு சரக்கானாலும் சேவையானாலும் முக்கியக் காரணியாக அமைகிறது. இந்த மதிப்பானது முதலில் தனிநபரின் அடிப்படையில் காண்கிறார் குமரப்பா. அது மனிதருடைய தனிப்பட்ட தேவைகளை நிறைவேற்றும் வண்ணம் உள்ளது.

இதனை நாம் அவர் நிலைத்த பொருளியல் ஒரு பார்ப்பனியப் பொருளியல் என்று கூறுவதோடு ஒப்பிடலாம். இந்த நிலையானது தன்னலமின்றி ஒரு தாயைப் போல இழைப்பதாக நாம் எடுத்துக் கொள்ளலாம்.

மதிப்பு என்பது எந்த ஒரு சரக்கானாலும் சேவையானாலும் முக்கியக் காரணியாக அமைகிறது. இந்த மதிப்பை முதலில் தனிநபரின் அடிப்படையில் காண்கிறார் குமரப்பா. அது மனிதருடைய தனிப்பட்ட தேவைகளை நிறைவேற்றும் வண்ணம் உள்ளது. மதிப்பீடு (Valuation) என்பதும் குமரப்பாவின் நிலைத்த பொருளியலில் முன்மொழிந்த மற்றொரு கேள்வியாக உள்ளது. இந்த மதிப்பீடானது ஒவ்வொரு நாட்டிற்கும் மாறுபடும். எடுத்துக்காட்டுக்கு அமேரிக்கச் சமூகத்தில் உள்ளது மதிப்பீடும் இந்திய சமூகத்தில் உள்ள மதிப்பீடும் வேறுபடும். இன்னும் சொல்லப்போனால் பொருளியல் தளத்தில் நாட்டிற்குள்ளேயே அதிக வேறுபாடுகளைக் கொண்ட இந்தியாவில் தமிழ் சமூகத்தில் உள்ள மதிப்பீடும் கேரள சமூகத்தில் உள்ள மதிப்பீடும் வேறுபடும். இந்த மதிப்பீடுகளைப் பற்றி எழுதும்போது குமரப்பா பொருளியல் கல்வியில் உள்ள அரசியலையும் ஒரு அலசு அலசுகிறார்.

*"Values and Valuation are the pair that draw the chariot of Human Progress."*

மானுட வளர்ச்சிக்கு மதிப்புகளும் மதிப்பீடும் எவ்வளவு அவசியம் என்பதை வரையறுத்தார் குமரப்பா. இதுதான் ஏன் பேரளவு உற்பத்திக்குப் பதிலாகக் கிராம அளவு உற்பத்தியை குமரப்பா முன்மொழிந்தார் என்பதைப் புரிந்து கொள்வதற்கு வசதியாக உள்ளது. இந்த மதிப்புகளும் மதிப்பீடுகளும் நமது வாழ்க்கை தரத்தினோடு பார்க்கவேண்டிய தேவை உள்ளது. நமது அன்றாட நுகர்வு போரினைத் தாண்டி நமது பொருளியல் அமைப்பு மற்றும் சமூகம் ஆகியவற்றைப் பெரிதும் பாதிக்கிறது. நான் ஆரம்பக் காலப் பள்ளியில் படித்த காலத்தில் கண்ணாடி குப்பியில் சிறு சிறு கடைகளில் கடலைமிட்டாய் கிடைக்கும். டேய்ரி மில்க் சில கடைகளில் மட்டும்தான் கிடைக்கும் அதுவும் ஒரே சாக்லேட் அளவுகளில் வேறுபடும். இப்போது கடலைமிட்டாய் பாக்கெட்டுகளில் வந்துவிட்டன. உதிரியாக எளிதில் கிடைப்பதில்லை. ஆனால், டேய்ரி மில்கில் பல வகைகள் வேற வேற கடைகளில் முன்பைவிட அதிகமாகக் கிடைக்கிறது. குப்பிகளில் உதிரியாகக் கொட்டிகிடக்கும் கடலைமிட்டாய்களைத் தேட வேண்டிய சூழலுக்குத் தள்ளப்பட்டுள்ளோம். இது நம் மதிப்பீடுகளினால் ஏற்பட்ட மாற்றங்களில் ஒன்றாக நான் கருதுகிறேன்.

வாழ்க்கைத் தரமானது நாம் வெளிநாட்டுப் பொருட்களை வாங்குவதனால் பாதிக்கபட்டுள்ளது. Friends படத்தில் வடிவேலு இருநூறு ஆண்டுகளாக ஓடிக்கொண்டிருந்த கடிகாரம் உடைந்தபோது "அப்பாடா நான் கூடப் புதுசு நினைச்சுட்டங்க" என்று கூறுவார். இருந்தாலும் இன்று நாம் எல்லாரும் நேசமணிகளாக மாறிவிட்டோம் என்பதே உண்மை. சுற்றுச்சூழல் ஆர்வலர் மற்றும் எழுத்தாளர் ஜீயோ டாமின் அவர்கள் கூறுவதுபோல, ஒரு பேனா எவ்வளவு பழையதோ அதற்கு அவ்வளவு மதிப்புப் பெற்ற காலம் மாறி, பயனிருந்தும் சில பழைய பொருட்களைக் குப்பைக்குத் தள்ளும் நெகிழி யுகத்திற்கு வந்துவிட்டோம். இதில் போதாக்குறைக்கு வெளிநாட்டுப் பொருட்களின் மீதுள்ள மோகமும்




அதிகரித்துவிட்டது. குமரப்பா எழுதுகிறார்:

*"we are often lead the way bye, low money price is ignoring the great gases in our economic and social organisation made by such short sighted choice of ours. The goods produced by our neighbours have values which are not represented in the money price. The money value is most often the least important of all considerations although frequently, it is the sole factor that affects our decision."*

மதிப்பீடுகளானது பணத்தின் அடிப்படையில் அமைவதுதான் இங்குள்ள முதன்மை சிக்கல். பணத்தினைக் குமரப்பா எவ்வாறு புரிந்துகொண்டார் என்பதே ஒரு பெரிய தலைப்பு. வங்காளப் பஞ்சம் கூட இந்தப் பணத்தின் செயல்நுட்பங்கள் காரணமாக அமைகின்றன. வாழ்க்கைத் தரமானது அடிப்படையில் கொண்ட நோக்கமே இங்கு மாற்றப்பட்டுள்ளதா என்பதும் இந்த இடத்தில் நாம் கேட்க வேண்டிய கேள்வி. தரம் என்று நான் இங்கே *Standard*-ஐக் குறிப்பிடுகிறேன். இந்த *Standards*-ஐ வரையறுக்கும்போது சில சிக்கல்கள் உண்டாகின்றன. அதாவது அமேரிக்காவில் ஒரு வாழ்க்கைத் தரம் இருக்கும், மேற்காசிய நாடுகளில் ஒரு வாழ்கைத் தரம் இருக்கும், இந்தியாவில் ஒரு வாழ்கைத் தரம் இருக்கும். ஆகவே குமரப்பா இவ்வாறு *Standards*-ஐ வரையறுக்கிறார்.

*'a standard that is to fulfill all these requirements will naturally be one that has to be acceptable both to the individual and to the society.'*

இதுதான் முக்கியாமான இடம். தனிநபரும் சமூகமும் சேர்ந்தே ஒரு தரத்தினை நிர்ணயம் செய்கிறது. இந்தத் தரத்தினைப் பிரித்துப் பார்ப்பதிலும் நாம் தவறு செய்துள்ளோம். இது உயர்ந்த தரம் இது தாழ்ந்த தரம் என்பதை நாம் எல்லாவற்றிலும் கூற இயலாது. இந்த வகைப்படுத்துதல் சிக்கலானது. நாம் பொருளின் தரத்தை மதிப்பீடு செய்வதற்கு நாம் அவற்றை *Complex* மற்றும் *Simple* என நாம் வகைப்படுத்த வேண்டும். இது ஒரு உளவியல் தேர்வினை *(Psychological Preference)*. மேலும் வேலை *(Work)* மற்றும் வேலைப்பிரிவினை *(Division of Labour)* பற்றியும் குமரப்பா இந்த இரண்டாம் பகுதியில் குறிப்பிடுகிறார்.

குமரப்பாவின் நிலைத்த பொருளியல் நூலானது சிறிது கவனத்தோடு அணுக வேண்டிய நூல். சர்வோதயப் பொருளியலை பார்ப்பனியப் பொருளியலாக அவர் சில இடங்களில் அணுகுவது பொருளியல் அமைப்பு சார்ந்த சிக்கல்களை வகுக்கிறது. ஆனால், குமரப்பா ஏன் ஒரு சிறந்த பொருளியலாளராக விளங்குகிறார் என்றால், அவர் கோட்பாட்டளவில் தனது சிந்தனையைச் சுருக்காமல் அதனைச் செயல்முறை வடிவில் வெற்றி காண முயன்றார். அனைத்திந்திய கிராம தொழிற்சாலைகள் கழகம், தே கல்லுப்பட்டியில் அவர் வாழ்ந்த வீடு ஆகியவை அவரது முயற்சிகளை எடுத்துச் சொல்லும். இதுதான் குமரப்பாவை மற்ற பொருளியல் சிந்தனையாளரோடு வேறுபடுத்திக் காட்டுகிறது.

***official.indrajith@gmail.com***

# பட்டினச்சேரி எண்ணெய் கசிவு; சி.பி.சி.எல்.நிறுவனத்திற்கு ரூ 5 கோடி அபராதம் விதித்தது பசுமைத் தீர்ப்பாயம்.

**சரவணன்**



**நா**கை மாவட்டம் பட்டினச்சேரி கடற்கரையில் கச்சா எண்ணெய் குழாயில் கசிவு ஏற்பட்ட விவகாரம் CPClக்கு ரூ. 5 கோடி அபதாரம் விதித்தது பசுமைத் தீர்ப்பாயம்.

நாகப்பட்டினம் மாவட்டம், நாகூர் பட்டினச்சேரி மீனவ கிராமத்தில் கடந்த மார்ச் 2, 2023 அன்று சி.பி.சி. எல் நிறுவனத்தின் கச்சா எண்ணெய் குழாயில் கசிவு ஏற்பட்டது. இது தொடர்பாக நாளிதழ்களில் வெளியான செய்தியின் அடிப்படையில் டெல்லியில் உள்ள தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் முதன்மை அமர்வு தாமாக முன்வந்து வழக்காக விசாரித்து வந்தது. இந்த வழக்கின் விசாரணை தென்மண்டல அமர்வுக்குப் பின்னர் மாற்றப்பட்டிருந்தது.

1993 ஆம் ஆண்டு, சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் (சி.பி.சி.எ.ல்) நிறுவனம், காவிரி பேசின் ரீபைனரி எனப்படும் தனது இரண்டாவது கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனத்தை நாகப்பட்டினம் மாவட்டம் நரிமணம் பகுதியில் நிறுவியது.

தொடக்கத்தில் 0.5 MMTPA திறன் கொண்டதாக உருவாக்கப்பட்ட இந்த சுத்திகரிப்பு நிலையம், பின்னர், 1.0 MMTPA எண்ணெய் சுத்திகரிப்பு திறன் கொண்டதாக விரிவாக்கம் செய்யப்பட்டது.

இந்த சுத்திகரிப்பு நிலையம், காவிரிப் படுகையில் ONGC நிறுவனத்தின் கிணறுகளில் எடுக்கப்படும் கச்சா எண்ணெயைச் சுத்திகரிக்கும்

நோக்கத்தோடு உருவாக்கப்பட்டது. எனினும், தொழிநுட்பக் காரணங்களால் கடந்த 1/04/2019 அன்றோடு எண்ணெய் சுத்திகரிப்புப் பணி நிறுத்தப்பட்டுள்ளது. இதேவேளையில், நரிமணம் சுத்திகரிப்பு நிலையத்தை 9 MMTPA திறன் கொண்டதாக விரிவாக்கும் பணிகளும் நடைபெற்று வருகிறது.

இதேவேளையில், எண்ணெய் சுத்திகரிப்பு பணி நிறுத்தப்பட்டு இருந்தாலும் கூட, ONGC நிறுவனத்திற்கு சொந்தமான கிணறுகளில் எடுக்கப்படும் கச்சா எண்ணெயானது நரிமணம் சுத்திகரிப்பு நிறுவனத்தின் கொள்கலன்களில் சேகரிக்கப்பட்டு, 45 நாட்களுக்கு ஒருமுறை மணலியில் உள்ள சி.பி.சி.எல். நிறுவனத்திற்குச் சொந்தமான எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனத்திற்கு அனுப்பப்படுவதற்காக, 9KM நீளமுடைய 20" குழாயின் வழியாக நரிமணத்திலிருந்து, காரைக்கால் துறைமுகத்திற்கு கொண்டு செல்லப்பட்டு வருகிறது.

இந்நிலையில், நாகூர் பட்டினச்சேரி கடற்கரை வழியாக காரைக்கால் துறைமுகம் நோக்கிச் செல்லும் இந்த குழாயில் தான், கடந்த மார்ச் 2 அன்று எண்ணெய்க் கசிவு ஏற்பட்டது. இந்த எண்ணெய் குழாய் உயிர்ச்சூழல் மிக்க அலைகளின் தாக்கம் கொண்டப் பகுதியில், குறிப்பாக தாழ்வலை கோட்டிலேயே இருந்தது குறிப்பிடத்தக்கது.

அனைத்துத் தரப்பு விசாரணையும் முடிவடைந்த நிலையில் மே 22ஆம் தேதி தென்மண்டல தேசிய பசுமைத் தீர்ப்பாய அமர்வு அளித்த தீர்ப்பில், எண்ணெய்க் கசிவால் சுற்றுச்சூழலுக்கு ஏற்பட்ட பாதிப்பிற்கான இழப்பீடாக ரூ.5 கோடியை சி.பி.சி.எல் நிறுவனம் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு இரண்டு மாதங்களுக்குள் செலுத்த வேண்டும் எனவும் இத்தொகையை அம்மாவட்டத்தின் சுற்றுச்சூழல் மேம்பாட்டிற்கும் பொதுமக்களின் ஆரோக்கியத்திற்காகவும் செலவளிக்க வேண்டும் எனக் கூறப்பட்டிருந்தது.




20



# எண்ணூர் மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் அயல்படர் உயிரினம்

சதீஷ் லெட்சுமணன்

அனல்மின் நிலையங்களின் சாம்பல் கழிவுகள், ஆற்றில் வெளியிடப்படும் சூடான நீர், எண்ணெய் நிறுவனங்களின் கழிவுகள் ஆகியவற்றால் பாதிப்படைந்துள்ள எண்ணூர் முதல் பழவேற்காடு வரையிலான மீனவ மக்களின் வாழ்வாதரத்தை மேலும் மோசமாக்கியுள்ளது ஒரு புதிய பிரச்சனை.

செய்தி சேகரிப்பதற்காக 7 ஆண்டுகளுக்கும் மேலாக நான் கொசஸ்தலை ஆறு, முகத்துவாரம், பக்கிங்காம் பகுதிகளுக்குச் சென்று வந்துள்ளேன். அங்குள்ள மீனவர்களுக்கு முக்கியமானப் பிரச்சனையே அனல்மின் நிலையங்கள் மற்றும் தொழிற்சாலைகளின் கழிவுகளால் நீர்நிலைகள் பாதிக்கப்படுவதுதான். ஆனால், இந்த முறை முற்றிலும் வேறுபட்ட ஒரு பிரச்சனைக்காக அங்கு சென்றிருந்தேன்.

நாங்கள் படகில் சென்று கொண்டிருக்கையில் கொசஸ்தலை ஆற்றின் பெரும்பாலான பகுதிகளில் கட்டிடக் கழிவுகளை கொட்டி வைத்ததுபோல மேடு மேடாகத் தெரிந்தது என்னை ஆச்சர்யத்துக்கும் அதிர்ச்சிக்கும் ஆளாக்கியது. அப்போது





என் படகிலிருந்த மீனவர் ஒருவர் அந்த மேட்டில் இறங்கினார். இறங்கியவுடன் அவரது கால்கள் இரண்டடி ஆழத்திற்கு சடாரென உள்ளிறங்கியது. கைகளால் அக்குவியல்களை அள்ளிக் காட்டினார். கருநிறத்தில் நெருக்கமாக கழிவும் சிப்பிகளுகுமாகக் காணப்பட்டது.

“முன்னாடி மீன்பிடிக்கப் போனால் 2000 – 3000 வரை கிடைச்சது. இந்த காக்கா ஆழி வந்த அப்புறம் ஒரு பொறப்பும் இல்லாம போய்டுச்சு. ஆறு முழுக்க போர்வைபோல படிஞ்சிருக்கு. எங்களால ஆத்துல வலையே கட்ட முடில. ஆத்துல இறங்கினா இந்த சிப்பிங்க காலைக் கிழிச்சிடுது” என்கிறார் மீனவர் சசிகுமார்.

### காக்கா ஆழி – Mytella strigata

இது ஒரு வகையான தென் அமெரிக்க சிப்பியினம். எண்ணூர் பகுதிக்கு இது அயல்வகை உயிரினமாகும். கடந்த 3 ஆண்டுகளாக எண்ணூர் முதல் பழவேற்காடு வரையிலான கொசஸ்தலை ஆறு, முகத்துவாரம், பக்கிங்காம் கால்வாய் உள்ளிட்ட நீர்நிலைப் பகுதிகளில் நீருக்கடியில் போர்வைபோல படர்ந்து காணப்படுகிறது இந்த காக்கா ஆழி. ஆற்றின் மணலிலும் சேற்றிலும் மேல்பகுதியில் காணப்படுவதுபோலத் தெரிந்தாலும் ஆற்றில் இறங்கினால் 2 முதல் 3 அடி ஆழம் வரை இந்தச் சிப்பிகள் காணப்படுகின்றன.

இந்த காக்கா ஆழிகள் எண்ணூர் முதல் பழவேற்காடு வரையில் ஆறு, முகத்துவாரம் பகுதிகளில் மீன்பிடித் தொழில் நடத்தும் மீனவர்களின் வாழ்வாதரத்தையே அழித்துள்ளன. இந்த காக்கா ஆழிகளின் பரவலால் ஆற்றில் இறால், நத்தை மற்றும்






**காக்கா ஆழியின் பரவலால் எண்ணூர் முதல் பழவேற்காடு வரையில், 60 இடங்களில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் தற்போது 10 இடங்களில் மட்டுமே மீன்பிடித்து வருகின்றனர்.**

நாட்டினங்களான மஞ்ச மட்டி, பச்சை ஆழி உள்ளிட்ட சிப்பியினங்கள் அழிந்து வருவதாக அப்பகுதி மீனவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

காட்டுக்குப்பத்தைச் சேர்ந்த 60 வயது மீனவர் ராமன் கூறுகையில் "50 வருசமா இந்த ஆற்றை நம்பித் தொழில் செய்கிறேன். இவ்ளோ வருசமா அனல்மின் நிலையங்கள் சுடுதண்ணி விட்டதாலும், பக்கிங்காம் கால்வாயில் கழிவுகள் வருவதாலும் ஆறு பாதிப்படைந்தது. ஆனால், இப்போ இந்த காக்கா ஆழி வந்த பிறகு தொழிலே செய்ய முடியல. கொஞ்சங்கூட மீன் கிடைக்கல. எங்க படகைக் கூட கொண்டு செல்ல முடியாத அளவுக்கு ஆறு மேடாகிப் போனது. நாங்களே ஊருக்கு 2 லட்சம் என 4 லட்சம் போட்டு மண்வெட்டி வைத்து காக்கா ஆழியை வெட்டி அகற்றி படகு செல்வதற்கு வழி ஏற்படுத்தினோம்.

காக்கா ஆழியின் பரவலால் எண்ணூர் முதல் பழவேற்காடு வரையில், 60 இடங்களில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் தற்போது 10 இடங்களில் மட்டுமே மீன்பிடித்து வருகின்றனர். மேலும் 600 ரூபாய் செலவழித்து மீன்பிடிக்க வந்தால் ஒரு நாளில் 500 ரூபாய்க்கு மட்டுமே மீன் கிடைப்பதாகக் கூறுகிறார் மீனவர் குணசேகரன். "முன்னாடிலாம் படகை எடுத்துட்டு ஆத்துல வரும்போதே ரெண்டு கரையிலும் பல பெண்கள் கைகளால் தடவியே நண்டு, இறால் பிடிப்பதைப் பார்க்க முடியும். அதைப் பார்க்கவே திருவிழா போல இருக்கும். ஆனால், இப்போ ஆற்றில் மீன்பிடிக்க பெண்கள் வருவதே இல்லை. கைகளால் தடவிப் பிடிக்க இப்போ காக்கா ஆழிதான் இருக்கு" என்றார் குணசேகரன்.

இந்த காக்கா ஆழிகள் துறைமுகங்க:ள் வழியாக எண்ணூர் பகுதியில் பரவியிருக்கலாம் எனக் கூறப்படுகிறது. வெளிநாடுகளில் இருந்து வரும் சரக்கு கப்பல்கள் கப்பலை நிலைப்படுத்துவதற்காக கப்பலுக்குள் இருக்கும் தொட்டிக்குள் நீர் நிரப்பி வரும். சரக்குகளை இறக்கும் துறைமுகத்தின் இறங்குதளத்தைப் பொறுத்து அந்த நீர் வெளியேற்றப்படும். இம்முறைய Ballasting என்றழைப்பர். அப்படி காமராஜர் அல்லது காட்டுப்பள்ளி துறைமுகத்துக்கு வந்த கப்பல்களின்






வழியாக இந்த காக்கா ஆழிகள் பரவியிருக்கக்கூடும் எனவும் கூறுகிறார்கள்.

மீனவர்களின் தொடர் கோரிக்கையை ஏற்ற தமிழ்நாடு அரசு மீன்வளத்துறையானது, தமிழ்நாடு டாக்டர்.ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் மற்றும் டாக்டர் எம்.ஜி.ஆர். மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பொன்னேரி மீன்பிடி தொழில்நுட்பம் மற்றும் மீன்வளப்பொறியியல் துறையை இதுகுறித்து ஆய்வு மேற்கொள்ளக் கோரியது. அதனடிப்படையில் இவ்விரு பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த நிபுணர்களும் காக்கா ஆழி பாதிப்படைந்த பகுதிகளில் 2023 ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் நேரில் ஆய்வு மேற்கொண்டனர். எண்ணூர் கழிமுகத்தில் எட்டு இடங்களில் காக்கா ஆழிகளைச் சோதனைக்காகச் சேகரித்தனர்.

டாக்டர் எம்.ஜி.ஆர். மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சமர்ப்பித்த அறிக்கையில் இந்த காக்கா ஆழிகள் எண்ணூர் கழிமுகத்தைத் தீவிரமாக 7 கிலோமீட்டருக்கும் மேலாக ஆக்கிரமித்துள்ளதாகவும் $25cm^2$ பரப்பில் 180 முதல் 250 காக்கா ஆழிகள் காணப்படுவதாகவும் இறால் உற்பத்திக்கு அவசியமான மிதவைவாழிகளை இந்த காக்கா ஆழிகள் அழித்துள்ளன எனக் கூறப்பட்டிருந்தது. மேலும் தூர்வாருவதன் மூலமாக அல்லது மீனவர்களைக் கொண்டு இந்த ஆழிகளைச் சேகரித்து மீன்களுக்கு உணவாகவும் அல்லது மீன் உரம் தயாரிப்பதன் மூலமாகவும் இவற்றை அகற்ற அரசு முன்வர வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டது.

இவ்வறிக்கைகளின் அடிப்படையில் தமிழ்நாடு மீன்கள் மற்றும் மீனவர் நலத்துறை இணை இயக்குனர் 17.03.2023ல் மீன்வளத்துறை ஆணையாளருக்கு எழுதிய கடிதத்தில் இடைக்காலத் தீர்வாகக் காக்கா ஆழிகளைத் தூர்வாரி அகற்ற வேண்டும், காக்கா ஆழிகளை மீன்களுக்கு உணவாக வழங்குவதற்கான வியாபார வழிகளை ஆராய வேண்டும், ஆழிகளின் சிப்பிகளைச் சுண்ணாம்பு தயாரிக்கும் ஆலைகளுக்கு வழங்குவது குறித்தும் ஆராயலாம் எனக் கூறியிருந்தார்.

மேற்கூறப்பட்ட அறிக்கைகளின் அடிப்படையில் எண்ணூர் கழிமுகத்தை தூர்வாருவதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என மீனவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

புகைப்படங்கள்: **நாடோடி விக்கி**

# பூவுலகின் நண்பர்கள் புதிய வெளியீடுகள்




விலை
ரூ.150/-




விலை
ரூ.100/-




விலை
ரூ.110/-




விலை
ரூ.110/-

## புத்தகங்களைப் பெற: 90949 90900




# முல்லைப் பெரியாரில் புதிய அணை; கேரள அரசு மீண்டும் முயற்சி

**நிலன்**

*முல்லை பெரியார் அணைக்குக் கீழே புதிய அணை கட்டுவதற்கான சுற்றுச்சூழல் தாக்க அறிக்கை செய்வதற்கான ஆய்வு எல்லைகள் கோரி 05.02.2024ல் கேரள அரசின் நீர்வளத்துறை ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல் நிபுணர் மதிப்பீட்டுக் குழுவிடம் விண்ணப்பித்திருந்தது. இந்த விண்ணப்பத்தை மே 28 தேதி பரிசீலனைக்காக ஒன்றிய சுற்றுச்சூழல் நிபுணர் மதிப்பீட்டுக் குழு பட்டியலிட்டிருந்தது.*

*இந்த புதிய அணை கேரள மாநிலம், பீர்மேடு தாலுகா, பெரியார் கிராமத்தில் அமைகிறது. இந்த இடம் வண்டிப்பெரியாரிலிருந்து*




8கிமீ தூரத்தில் உள்ளது. தற்போது இருக்கும் அணையிலிருந்து 1200அடி கீழ்திசையில் புதிய அணையைக் கட்ட கேரள அரசு திட்டமிட்டுள்ளது.

தற்போதுள்ள அணையின் வயது 128 ஆண்டுகள் ஆனதால் பாதுகாப்பற்ற நிலையை எட்டியுள்ளதாகவும், அணை உடைந்தால் கேரளாவில் பெரும் பொருட்சேதமும், உயிர்ச்சேதமும் ஏற்படும் மற்றும் தமிழ்நாட்டின் குடிநீர் மற்றும் விவசாயத் தேவைக்கான நீரைத் தொடர்ந்து வழங்குவதை உறுதி செய்யவும் இப்புதிய அணை அவசியம் எனவும் புதிய அணை கட்டிய பின்னர் தமிழ்நாட்டிற்கு இப்போது வழங்குவதைவிட அதிக தண்ணீரை வழங்க முடியும் என கேரள அரசு தெரிவித்துள்ளது.

அணையின் உயரம் 175.95 அடி, நீளம் 1437 அடி.

இதற்குத் துணை அணையாக 82 அடியில் இன்னொரு அணையும் கட்டப்படவுள்ளது.

**மொத்த மதிப்பீடு 1000 கோடி**

இந்த அணை கட்டுவதால் பழைய அணையைவிட 183 மில்லியன் கன அடி அதிக நீரை தேக்கி வைக்க முடியும். 0.502 சதுர கிலோமீட்டர் நீர்ப்பிடிப்பு பகுதி அதிகரிக்கும். 24.91 ஹெக்டேர் பரப்பளவு பகுதி நீரில் மூழ்கும்.

புதிய அணை கட்டி முடித்த பின்னர் பழைய அணை பகுதி பகுதியாக செயலிழக்கம் செய்யப்பட்டு உடைத்து அகற்றப்படும். அனைத்து அனுமதிகளும் பெறப்பட்ட 4 - 5 ஆண்டுகளில் புதிய அணை கட்டி முடிக்க திட்டமிட்டுள்ளது.

கடந்த 2018ஆம் ஆண்டு நவம்பர் 14ஆம் தேதி 7 நிபந்தனைகளுடன் மத்திய சுற்றுச்சூழல் துறை கேரள அரசுக்குப் புதிய அணை கட்டுமானத்திற்கான சுற்றுச்சூழல் தாக்க ஆய்வு மேற்கொள்ள ஆய்வு எல்லைகளை வழங்கியிருந்தது. ஆனால் அந்த ஆய்வு எல்லைகளின் கால அவகாசம் 4 ஆண்டுகள்தான் என்பதால் 2022 உடன் அது முடிவடைந்த நிலையில் கேரள அரசு தற்போது மீண்டும் விண்ணப்பம் செய்துள்ளது.

2018ஆம் ஆண்டில் ஒன்றிய அரசு வழங்கிய இந்த அனுமதியைத் திரும்பப் பெறுமாறு அப்போதைய முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி இந்தியப் பிரதமருக்குக் கடிதம் எழுதியிருந்தார். தமிழ்நாட்டின் முக்கியமான அரசியல் கட்சிகள் அனைத்தும் கண்டன அறிக்கை வெளியிட்டிருந்தனர். ஆனால், ஒன்றிய அரசு 2018ஆம் ஆண்டு கேரள அரசுக்கு வழங்கிய அனுமதியில் முக்கியமான சில நிபந்தனைகள் இடம் பெற்றிருந்தன. தமிழ்நாடு அரசின் ஒப்புதல் இருந்தால் மட்டுமே அணைக் கட்டுமானத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்கப்படும் என்பது அந்த நிபந்தனைகளில் ஒன்றாகும்.

**நிபந்தனைகள்:**

1) 2014 உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி இரண்டு மாநிலம் சேர்ந்து எடுக்கும் முடிவின்படியே அணை கட்ட முடியும் என்பதால் தமிழக அரசின் ஒப்புதல் கடிதம் இணைக்க வேண்டும்.

2) முல்லை பெரியார் அணை

**தற்போது கேரள அரசு சமர்ப்பித்துள்ள விண்ணப்பத்தில் உச்ச நீதிமன்ற ஏற்கெனவே சுற்றுச்சூழல் தாக்க ஆய்வை மேற்கொள்ள அனுமதித்திருப் பதால் தமிழ்நாடு அரசின் ஒப்புதலை சுற்றுச்சூழல் அனுமதிக்கான பரிசீலனையில் சமர்ப்பிக்க அவசியமில்லை எனத் தெரிவித்துள்ளது.**

*தொடர்பாக மதுரை உயர்நீதிமன்ற உத்தரவைச் சமர்ப்பிக்க வேண்டும்.*

*3) ஆய்வு எல்லைகள் வழங்கப்பட்டிருப் பதால் சுற்றுச்சூழல் அனுமதிக்கு இந்த விண்ணப்பம் தகுதியானது என்று அர்த்தமில்லை*

*4) அனைத்து வகையான அனுமதி/ தடையில்லாச் சான்றுகளையும் பெற வேண்டும்.*

*5) தற்போது வழங்கப்பட்டுள்ள ஆய்வு எல்லைகள் உச்சநீதிமன்ற/பசுமைத் தீர்ப்பாய உத்தரவுற்கு கீழ்பட்டவை*

*6) டாக்டர். தாத்தே கமிட்டியின் முடிவுகளை சமர்ப்பிக்க வேண்டும்.*

*7) அணை கட்டுவதால் மூழ்கக் கூடிய பகுதிகள் மற்றும் அணையின் பராமரிப்பு தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டில் உள்ளதால். சுற்றுச்சூழல் தாக்க அறிக்கை செய்வதற்கு தமிழ்நாடு அரசின் ஒப்புதல் அவசியம்.*

*அப்போது தி.மு.க. எம்.பி. கனிமொழி மாநிலங்களவையில் முல்லை பெரியார் அணை கட்டுவதற்கான ஆரம்பகட்ட தகவல்களைத் திரட்டுவதற்கான ஒப்புதலைக் கேரள அரசு, தமிழ்நாடு அரசிடம் பெற வேண்டுமா என்று கேள்வி எழுப்பியிருந்தார். அதற்குப் பதில் அளித்த மத்திய இணை அமைச்சர் மகேஷ் சர்மா சுற்றுச்சூழல் தாக்க அறிக்கை, 2006 அறிவிக்கையின்படி தமிழக அரசின் ஒப்புதல் அவசியம் இல்லை என்று கூறியிருந்தார்.*

*ஆனால், தற்போது கேரள அரசு சமர்ப்பித்துள்ள விண்ணப்பத்தில் உச்ச நீதிமன்ற ஏற்கெனவே சுற்றுச்சூழல் தாக்க ஆய்வை மேற்கொள்ள அனுமதித்திருப் பதால் தமிழ்நாடு அரசின் ஒப்புதலை சுற்றுச்சூழல் அனுமதிக்கான பரிசீலனையில் சமர்ப்பிக்க அவசியமில்லை எனத் தெரிவித்துள்ளது.*

*இந்த விவகாரம் குறித்து தமிழ்நாட்டின் முக்கியமான கட்சிகள் பலவும் கேரள அரசின் அணை கட்டும் முயற்சியைத் தடுக்க வேண்டும் என வலியுறுத்தினர். இதனையடுத்து, உச்ச நீதிமன்றத்தின் உத்தரவினை மீறி, முல்லைப் பெரியாற்றில் புதிய அணை கட்டுவதற்கான ஆய்வினை மேற்கொள்ள கேரள அரசு முன்மொழிந்துள்ள கருத்துருவினை ஒன்றிய அரசு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளக்கூடாது என வலியுறுத்தி, ஒன்றிய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் பூபேந்தருக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் ஒன்றை எழுதினார்.*





அக்கடிதத்தில், மாண்பமை உச்ச நீதிமன்றத்தின் உத்தரவை மீறி, முல்லைப் பெரியாற்றில் புதிய அணை கட்டுவதற்கான ஆய்வினை மேற்கொள்வதற்கு கேரள அரசு விண்ணப்பித்துள்ள கருத்துருவினை ஒன்றிய அரசு பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டமைக்கு தமிழ்நாடு அரசு கடும் ஆட்சேபனையைத் தெரிவித்துக் கொள்வதாகத் தெரிவித்த முதலமைச்சர், ஒன்றிய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் (MoEF) கீழ் உள்ள நிபுணர் மதிப்பீட்டுக் குழு (Expert Appraisal Committee), கேரள அரசின் பாசன வடிவமைப்பு மற்றும் ஆராய்ச்சி வாரியத்தின் மேற்படி கருத்துருவினை வரவிருக்கும் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் சேர்த்துள்ளதையும் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டினார்.

28-5-2024 அன்று நடைபெறும் சுற்றுச்சூழல் நிபுணர் மதிப்பீட்டுக் குழுக் கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரலில், முல்லைப் பெரியாற்றில் புதிய அணை கட்டுவதற்கான சுற்றுச்சூழல் தாக்க அறிக்கையைத் தயார் செய்வதற்கு அனுமதி அளிப்பது தொடர்பான விவாதப் பொருளினை நீக்கிடவும், எதிர்காலத்தில் கேரள அரசின் இதுபோன்ற எந்தவொரு கருத்துருவினையும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளக் கூடாது எனவும் ஒன்றிய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அதிகாரிகளுக்கும், சுற்றுச்சூழல் நிபுணர் மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்-செயலருக்கும் ஒன்றிய சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சர் உத்தரவிட வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக் கொண்ட தமிழ்நாடு முதலமைச்சர், சூழ்நிலையின் தீவிரத்தை கருத்தில் கொண்டு ஒன்றிய சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சர் இதில் உடனடியாக தனிப்பட்ட முறையில் தலையிட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். இதனையடுத்து மே 28ஆம் தேதியன்று நடக்கவிருந்த இக்கூட்டம் ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

ஒன்றிய அரசு தேர்தல் நேரத்தில் இப்படி ஒரு இரு மாநிலங்களுக்கிடையேயான பிரச்சனையில் தலையிட வேண்டாம் என நினைத்தே இக்கூட்டத்தை ரத்து செய்திருக்கவே வாய்ப்புகள் அதிகம். ஆகவே, தமிழ்நாடு அரசு இவ்விவகாரத்தில் கூடுதல் விழிப்புடன் கண்காணிப்பில் இருப்பது அவசியமாகும்.




# சிலந்தியாற்றின் குறுக்கே தடுப்பணை; கேரள அரசுத் துறைகள் மாறுபட்ட விளக்கம்.

**நிலன்**

அமராவதி துணைப்படுகையின் ஒரு பகுதியான சிலந்தியாற்றின் குறுக்கே கேரள அரசு கட்டி வரும் தடுப்பணையை உரிய அனுமதிகளைப் பெற்றிருக்கா விட்டால் உடனடியாக நிறுத்த வேண்டும் என தென்மண்டல தேசிய பசுமைத் தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது.

இந்தத் தடுப்பணை கட்டுமானம் குறித்து நாளிதழ்களில் வெளியான செய்திகளின் அடிப்படையில் தென்மண்டல தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் நீதித்துறை உறுப்பினர் புஷ்பா சத்திய நாராயணா அமர்வு தாமாக முன்வந்து வழக்காக இன்று விசாரித்தது. அப்போது, இரு மாநிலங்களுக்கிடையே பாய்கின்ற ஆறு என்பதால் இத்தடுப்பணையானது தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்களின் நீர்ப்பாசனத்தை பாதிக்கக் கூடும் என்பதால் இவ்வழக்கை விசாரிக்க வேண்டியிருப்பதாக தீர்ப்பாயம் தெரிவித்தது.

மேலும், கேரள அரசுக்கு, குறிப்பாக கேரள நீர்வளத்துறை மற்றும் வனத்துறைக்கு இந்த தடுப்பணை இரண்டு மாநிலங்கள் தொடர்புடைய விவகாரம் என்பதால் தடுப்பணை கட்டுவதற்கு தேவையான அனைத்து ஒப்புதல்களும் இருப்பதை உறுதி செய்யக் கூறிய தீர்ப்பாயம் சிலந்தியாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுவதற்கான உரிய அனுமதிகளைகப் பெற்றிருக்கவில்லை என்றால் முறையான அனுமதிகளைப் பெறும் வரை தடுப்பணை கட்டுமானத்தை நிறுத்தி வைக்க வேண்டும்" என உத்தரவிட்டு வழக்கை அடுத்தகட்ட விசாரணைக்காக 23.07.2024 அன்று ஒத்தி வைத்தது.

**தடுப்பணை**

தமிழ்நாட்டின் ஊடகங்கள் அனைத்திலும் குறிப்பிடப்படுவதைப் போல இது ஒரு தடுப்பணைத் திட்டமில்லை. கேரள அரசு ஆவணங்கள் இத்திட்டத்தை *'WSS to Design and Construction of RCC Weir across Chilandhiyar river at Chilandhiyar in Vattavada Panchayath'* எனக் குறிப்பிடுகிறது. அதாவது, சிலந்தியாற்றின் குறுக்கே குடிநீர் வசதிக்காக அமைக்கப்படும் கலுங்கு (கொள்ளளவுக்கு அதிகமாக நிறையும் நீர் வெளியேறுவதற்கான அமைப்பு) என்பது இதன் பொருள். தடுப்பணைக்கும் கலுங்குக்கும் வித்தியாசமுண்டு. தடுப்பணையில் நீர் நிரம்பியதும் வழிகால் (Spillway) எனும் அமைப்பு வழியாக நீர் வெளியேறும்.

ஆனால், கலுங்கு நிரம்பியதும் கலுங்கைத் தாண்டி நீர் சென்றுவிடும். அப்படி ஒரு அமைப்புதான் அங்கு கட்டப்படுகிறது.

- இத்திட்டத்தைக் கேரள நீர்வள ஆணையமானது ஒன்றிய அரசின் ஜல் ஜீவன் மிஷன் எனப்படும் கிராமப்புற வீட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் செயல்படுத்துகிறது.
- இந்த கலுங்கு திட்டமானது இடுக்கி மாவட்டம் வட்டவடா பஞ்சாயத்திற்குட்பட்ட 3585 பேர் பயனடையும் வகையிலான மொத்தம் 5 பணிகளைக் கொண்ட ஒரு குடிநீர் விநியோகத் திட்டத்தின்(CWSS -Combined Water Suppy Scheme) ஒரு பகுதியாகும்.
- இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு 16.57 கோடியாகும். இதில் சிலந்தியாற்றின் குறுக்கே கலுங்கு அமைக்கும் திட்டத்தின் மதிப்பீடு 2.32 கோடியாகும். இந்த கலுங்கானது 45மீ நீளமும், கீழ்ப்பகுதி 2.5 மீ, மேல்பகுதி 1.5 மீ அகலம் உடைய 1மீ உயரம் கொண்டது.
- 27/12/2023 இத்திட்டத்திற்கு டெண்டர் கோரப்பட்டது. 2024 மார்ச் மாதம் கட்டுமானப் பணிகள் தொடங்கியது. மே 23ஆம் தேதி நிலவரப்படி 22% கலுங்கின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளன.
- இத்திட்டத்தால் இடுக்கி மாவட்டத்தில் உள்ள வட்டவடா கிராம பஞ்சாயத்திற்குட்பட்ட 6 வார்டுகள் குடிநீர் வசதிபெறும் எனக் கூறப்படுகிறது.




### வனத்துறை அனுமதி

சிலந்தியாற்றில் அமைக்கப்பட்டு வரும் இந்த கலுங்கு கட்டுமானத்தின் அமைவிடம் வனப்பகுதியாகும். குறிப்பாக பாம்பாடும் சோலை தேசியப் பூங்காவில் இவ்விடம் அமைந்துள்ளது. இந்த சிலந்தியாற்றின் நீராதாரமாக குறிஞ்சிமலை காட்டுயிர் சரணாலயம் உள்ளது. ஆகவே, இப்பகுதியில் கொண்டு வரப்படும் காட்டுயிர் மற்றும் காடு பாதுகாப்பு சாராத திட்டங்களுக்கு வனத்துறையின் முன் அனுமதி அவசியமாகும்.

ஆனால், வழக்கமான திட்டங்களைப் போல இந்தக் குறிப்பிட்ட திட்டத்திற்கு வனத்துறையின் முன் அனுமதி அவசியமில்லை என்கிறார் பாம்பாடும் சோலை தேசியப் பூங்காக்குட்பட்ட வனச்சரக அதிகாரி (பெயர் கூற விரும்பவில்லை). அவர் கூறியதாவது, “வட்டவடாவில் உள்ள வல்சப்பட்டி, சுவாமியார்லா, கூடலார்குடி ஆகிய 3 பழங்குடி சிற்றூர்களுக்கான குடிநீர்த் தேவைக்காக மட்டுமே இத்திட்டம் கொண்டு வரப்படுகிறது. இந்த கலுங்கு திட்டத்தின் மொத்தப் பயனாளர்களின் எண்ணிக்கையே 115 தான். இந்த மூன்று ஊர்களின் கிராம சபைகளும் இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளன. மேலும், வன உரிமைப் பாதுகாப்புச் சட்டம் 2006ன் பகுதி 2 பிரிவு 3 (2) ன் கீழ்




22.00 %: Concreting
Image 6 of 7
CLOSE ✕

பள்ளிகள், அங்கன்வாடி, மருத்துவமனை, நியாயவிலைக்கடை உள்ளிட்ட 13 வகையான திட்டங்களுக்கு வனப்பகுதியை நிலப்பயன்பாடு மாற்றம் செய்து கொள்ளலாம். இந்த 13 வகையான திட்டங்களில் குடிநீர்த் திட்டங்களுக்காகக் கலுங்கு அமைப்பதும் அடங்கும். ஒரு ஹெக்டேரில் 75 மரங்களுக்கு மேல் வெட்டாமல் திட்டம் செயல்படுத்தப்படும் பகுதி ஒரு ஹெக்டெருக்குக் குறைவாகவும் கிராம சபை ஒப்புதலும் இருந்தால் இந்த அனுமதியை வழங்கலாம் என வன உரிமைச் சட்டம் கூறுகிறது. அதனடிப்படையில் இத்திட்டத்திற்கு வனத்துறை அனுமதி வழங்கியுள்ளோம். ஆனால் காட்டுயிர் வாரிய அனுமதிகோரி கேரள நீர் ஆணையம் இன்னும் விண்ணப்பிக்கவில்லை" என்றார்.

கேரள நீர் ஆணையத்தின் கட்டப்பனா கோட்ட செயற்பொறியாளர் கிரீஷ் பேசுகையில் முற்றிலும் மாறுபட்ட கருத்துகளைத் தெரிவித்தார். "இத்திட்டத்திற்கு கேரள நீர் ஆணையம், வனத்துறை, காட்டுயிர் வாரியத்திடம் உரிய முன் அனுமதிகளைப் பெற்றுள்ளோம். இத்திட்டத்தின் மொத்த பயனாளர்களின் எண்ணிக்கை 6000. ஆனால், முதற்கட்டத்தில் 617பேர் மட்டும் குடிநீர் இணைப்பு வசதி பெறுவர். இது மிகவும் சிறிய அளவிலான கட்டுமானம், வெறும் 6 செண்டில் இந்த கலுங்கு அமைக்கப்படுகிறது. இதனால் தமிழ்நாட்டுக்கு எவ்வித பாதிப்பும் இருக்காது எனக் கூறினார்.

இந்த இரு அதிகாரிகளிடமும் தங்களிடம் உள்ள அணை தொடர்பான அனுமதிகளின் நகலைக் கேட்டதற்கு அவர்களிடமிருந்து எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. சிலந்தியாறு இரு மாநிலங்களுக்கிடையே பாயும் நதி என்பதால் கேரள அரசு தனது எல்கைக்குட்பட்ட பகுதிகளில் சிலந்தியாற்றின் நீரோட்டத்தைப் பாதிக்குமாறு எவ்வித நடவடிக்கை எடுத்தாலும் அதற்கு தமிழ்நாடு அரசின் ஒப்புதல் அவசியமாகும். அப்படி ஒரு ஒப்புதலைக் கேரள அரசு பெறவில்லை என்பது தமிழ்நாடு அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பிலிருந்து தெளிவாகத் தெரிகிறது.

"இத்திட்டம் தொடர்பான திட்ட விவரங்கள் ஏதும் தமிழ்நாடு அரசிடமோ அல்லது காவிரி நீர் மேலாண்மை ஆணையத்திடமோ வழங்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி, தமிழ்நாட்டின் நீர்வளத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்கள் கேரள நீர்வளத் துறை அதிகாரிகளிடம் ஏற்கனவே கேட்டுள்ளவாறு, இத்திட்டம் குறித்த தற்போதைய நிலவரம் மற்றும் கேரளாவின் பவானி மற்றும் அமராவதி(பம்பார்) துணைப் படுகைகளுக்கான பெருந்திட்டம் (Master Plan) ஆகிய முழு விவரங்களை அளிக்க வேண்டுமென்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் கோரியுள்ளார்" எனத் தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.



# நெல்லை மாவட்டத்தில் செவ்வரி நாரைகளின் மூன்றாவது புகலிடமாக உருவெடுக்கும் திடியூர்

மு. மதிவாணன் & அ. தணிகைவேல்

திருநெல்வேலி மாவட்டத்தில் கோடை வெயில் உச்சத்தில் இருந்த ஏப்ரல் மாதம் 22ம் தேதி பிற்பகல் 2 மணிக்கு கைபேசி அழைப்பு வந்தது. பேசியவர் அண்ணன் நாறும்பூ, திருப்புடைமருதூரிலிருந்து. மறைந்த நீதியரசர் ஐயா இரத்தினவேல் பாண்டியன் அவர்களுடன் இணைந்து திருப்புடைமருதூர் பறவைகள் காப்பகம் உருவாக முக்கிய காரணமாக இருந்த நபர்.

"நமது திருப்புடைமருதூர் மாதிரி திடியூரிலும் நாரைகள் கூடுகட்டுவதாக உறவினர் சொல்கிறார். என் பக்கத்தில்தான் இருக்கிறார், கொஞ்சம் பேசுங்கள்," என்றார் நாறும்பூ.

தம்பி என்னுடைய பெயர் உய்காட்டான். "எங்கள் திடியூரிலும் நூற்றுக்கணக்கான நாரைகள் கூடுகட்டியுள்ளது. இது கடந்த 20 வருடங்களாக நடைபெறுகிறது. எங்கள் ஊர் மக்கள் அவைகளை தொந்தரவு செய்வதில்லை. நீங்கள் எங்கள் ஊரை வந்து பார்த்து அந்த பறவைகளை முறையாக பாதுகாக்க முயற்சி எடுங்கள்," என்றார். அவருடைய பேச்சில் பறவைகள் மற்றும் பறவைகள் வாழிடங்களை பாதுகாக்க வேண்டும் என்பது திடியூர் கிராம மக்களின் எண்ணமாக இருப்பது தெரியவந்தது. அந்த கோடை வெயில் உச்சத்தில் இந்த செய்தி மனதை குளிர்வித்தது. எங்கள் ஆய்வு மையம் அமைந்துள்ள மணிமுத்தாறிலிருந்து திடியூர் சுமார் 30 கி.மீ. தொலைவு, நாங்கள் மறுநாள் காலையில் திடியூருக்குச் சென்றோம்.

வாகனத்தை திடியூர் பேருந்து நிறுத்தத்தில் நிறுத்தி விட்டு, கையில் இருகண் தொலைநோக்கியை எடுத்து

பார்த்தோம். பேருந்து நிறுத்தத்தின் பக்கத்தில் இருந்த இரண்டு வேப்ப மரங்களில் நூற்றுக்கணக்கான செவ்வரி நாரைகள் கண்களுக்கு விருந்தளித்தன. தொலைநோக்கி தேவைப்படவே இல்லை, அவ்வளவு அருகில் நாரைகளை பார்க்க முடிந்தது. அந்த வேப்ப மரங்களுக்கு அடியில் ஒரு தேநீர் கடை உள்ளது. கடைக்கு வெளியே போடப்பட்டிருந்த சிமெண்ட் பெஞ்சில் மகிழ்ச்சியாக அரசியல் பேசிக் கொண்டு கிராமத்தார்கள் டீ அருந்திக் கொண்டிருந்தார்கள். அவர்கள் தலைக்கு மேல் செவ்வரி நாரைகள் அருகிலுள்ள நீர்நிலைகளிலிருந்து பிடித்து



வந்த மீன்களையும் தாகத்தை தீர்க்க தண்ணீரையும் சுறுசுறுப்பாக ஊட்டிக் கொண்டிருந்தன. கீழே எச்சங்களும், எதிர்கழித்த இரைகளும் கிடந்தன. அதை அந்த எளிய மக்கள் பொருட்படுத்தவே இல்லை. பறவைகள் தங்கும் மரங்களின் கீழே நிறுத்தப்படும் வாகனத்தின் மீது விழும் எச்சங்களைக் கூட சகித்துக் கொள்ள முடியாமல் மரங்களையே வெட்ட நினைக்கும் இந்த காலத்தில் பறவைகளோடு ஒத்திசைந்து வாழும் இந்த எளிய மக்களின் வாழ்வு எங்கள் மனதிற்கு நெகிழ்வை தந்தது. இந்த நிகழ்வு பறவைகளும் கிராம மக்களும் எவ்வளவு பிணைப்புடன் இருக்கிறார்கள் என்பதை எங்களுக்கு உணர்த்தியது. அவர்களிடம் சென்று எங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு பேசத் தொடங்கினோம். அவர்கள் சொன்ன செய்திகள் வியப்பாக இருந்தது. இந்த யுகத்தில் இப்படியொரு கிராமம் இருப்பது அரிதினும் அரிது.

### திடியூர் கிராமம்

திருநெல்வேலியிலிருந்து பாபநாசம் செல்லும் சாலையில் தருவை என்ற ஊரிலிருந்து தெற்கே செல்லும் வழியில் திடியூர் உள்ளது. 250 வீடுகளைக் கொண்ட சிறிய கிராமம். ஊருக்கு மேல் புறம் பச்சையாறு, கீழ் புறம் தமிழாக்குறிச்சி, இளையாமுத்தூர், பூக்குழி குளங்கள், தெற்கே வயல்வெளிகளுக்கு எல்லை சிங்கிக்குளம் சமணப் படுகை குன்று, வடக்கே ஓமநல்லூர் கிராமம். பழமையான காரை வீடுகள் மற்றும் ஓட்டு வீடுகள் கொண்டு தொன்மை மாறாமல் உள்ள கிராமம். விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பில் ஈடுபடும் எளிய மக்கள் வாழும் பகுதி. திருநெல்வேலியிலிருந்து கோட்டாறுக்கு (நாகர்கோவிலின் பழைய பெயர் கோட்டாறு) செல்லும் வணிக பெருவழிப் பாதை இந்த ஊருக்கு மேல்புறத்தில் இருந்துள்ளதை வரலாற்றுச் செய்திகள் தெரிவிக்கின்றன. சிங்கிக் குளம் சமணப்படுகையில் பகவதி அம்மன் கோவிலில் காணப்படும் 12ம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டுகளில் திடியூரின் பெயர் இருப்பது இந்த கிராமத்தின் தொன்மைக்கு ஆதாரம்.

இந்த கிராமத்தில் உள்ள பழமையான தளவாய் மாடசுவாமி கோவிலில் உள்ள இலுப்பை மரத்தில்தான் இந்த செவ்வரி நாரைகள் இருபது ஆண்டுகளுக்கு முன் தஞ்சம் அடைந்துள்ளது. நூறு வருடங்களுக்கு முன்னர் எழுதப்பட்ட சொத்துப் பத்திரத்தில் இந்த இலுப்பை மரம் எல்லையாக காட்டப்பட்டுள்ளதை வைத்து இந்த மரம் பழமையானது என்பதை அறிய முடிகிறது. சுமார் 10 மீட்டர் சுற்றளவுடனும் 20 மீட்டர் உயரத்துடனும் பத்திற்கும் மேற்பட்ட கிளைகளை பரப்பியும் கம்பீரமாக நிற்கிறது இந்த இலுப்பை மரம்.



இந்த மரத்தில் தஞ்சமடைந்த செவ்வரி நாரைகளுக்கு கிராம மக்கள் நல்ல பாதுகாப்பை வழங்கி வருகிறார்கள். சமீபத்தில் நடைபெற்ற கோவில் கொடை விழாவின் போது கூட பறவைகளின் நலன் கருதி அந்த மக்கள் வெடி வெடிக்கவில்லை.

ஆரம்பத்தில் பறவைகளை வேட்டையாட வந்த நபர்களை எச்சரித்து அனுப்பியுள்ளார்கள். "எங்கள் சாமியே அந்த பறவைகளுக்கு அடியில்தான் உள்ளார், அதனால் நாங்கள் இந்த பறவைகளின் எச்சம் வீசுகிறது என்று கூட சொல்ல மாட்டோம்," என்கிறார்கள் அக்கம் பக்கத்தினர். குஞ்சுகள் வளர்ந்தவுடன் தாய் பறவைகள் அவைகளுக்கு நடைபயிற்சியை இந்த தெருவில்தான் கற்றுக்கொடுக்கும், அதைப் பார்ப்பதற்கே எங்களுக்கு அவ்வளவு ஆனந்தமாக இருக்கும் என்கின்றனர். ஒருவர் இன்னும் ஒருபடி கூடுதலாக நாரைகளின் குரல் மற்றவர்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தலாம், ஆனால் அதன் சத்தம் எங்களுக்கு உதய கீதம் என்றார்.

ஆரம்பத்தில் பறவைகளை விரட்டிய எங்கள் ஊர் நாய்கள் கூட தற்போது இந்த பறவைகளை எங்கள் கிராமத்தின் ஓர் அங்கமாக பார்க்க ஆரம்பித்துவிட்டது. தற்போது இந்த பறவைகளை நாய்கள் தொந்தரவு செய்வது இல்லை என்று அவர்கள் சொல்லுவதை கேட்கும் போது உணர்வுப்பூர்வமாக இருந்தது. பறவைகளுக்கு மக்கள் கொடுத்த ஆதரவைப் புரிந்து கொண்ட பறவைகள் தற்போது கூடு கட்டும் பகுதிகளை விரிவுப்படுத்தியுள்ளது.

இலுப்பை மரத்தில் ஆரம்பித்த பறவைகளின் இனப்பெருக்கம், கடந்த சில வருடங்களாக அருகில் சிவன் கோவிலில் உள்ள வில்வ மரம், பேருந்து நிறுத்தத்தில் உள்ள இரண்டு வேப்ப மரங்கள், வயல் கரைகளில் உள்ள இரண்டு சீமைக் கருவேல மரங்களிலும் கூடுகளை வைத்துள்ளது. செவ்வரி நாரைகளுடன் சேர்ந்து நெடலி வெள்ளைக்கொக்குகளும் கூடமைத்துள்ளது. வயல் கரையில் உள்ள பனைமரத்தில் கூழைக்கிடா பறவையும் இனப்பெருக்கம் செய்து வருகிறது. தமிழாக்குறிச்சி குளத்தில் உள்ள சம்புக் கோரைகளில் கீற்றுத் தூக்கனாங்குருவிகள் நூற்றுக் கணக்கில் புற்களால் கூடுகளை நெய்துள்ளது. இவ்வளவு பறவைகளுக்கு புகலிடமாக உள்ள திடியூரில் செவ்வரி நாரைகள் முதன்மையாக விளங்குகிறது.





### செவ்வரி நாரை

செவ்வரி நாரை என்பது சங்குவளை நாரை, மஞ்ச மூக்கு நாரை, வர்ண நாரை போன்ற பல பெயர்களில் அழைக்கப்பட்டு வருகிறது. செவ்வரி நாரை என்ற பெயரே சங்க இலக்கியங்களில் பயன்படுத்தப் பட்டுள்ளது.

"தெண்ணீர்ப் பொய்கை மேய்ந்த செவ்வரி நாரை
தேம்கொள் மருதின் பூஞ்சினை முனையின்,
காமரு காஞ்சித் துஞ்சும்
ஏமம்சால் சிறப்பின், இப் பணைநல் லூரே?"

– புறநானூறு 351

இந்த பாடலிலிருந்து செவ்வரி நாரை மருத நிலப் பறவை என்பதும், நெடிதுயர்ந்த மருத மரங்களில் சங்ககாலம் தொட்டே வாழ்ந்து வருவதும், மக்களுடன் அண்டி வாழக்கூடிய ஒரு பறவையாகவும் தெரிகிறது. இந்த பறவையின் பின் இறக்கைகளில் காணப்படும் சிவப்பு நிற வரிகளால் இப்பெயர் பெற்றுள்ளது.

### திருநெல்வேலி மாவட்டத்தில் செவ்வரி நாரை இனப்பெருக்க மையங்கள்

தாமிரபரணி பாய்ந்தோடும் திருநெல்வேலி மாவட்டத்தில் கூந்தன்குளம் பறவைகள் சரணாலயம் மற்றும் திருப்புடைமருதூர் பறவைகள் காப்பகம் ஆகிய பகுதிகளில் செவ்வரி நாரைகள் பன்னெடுங்காலமாக இனப்பெருக்கம் செய்து வருகின்றன. இவ்வரிசையில் தற்போது திடியூரும் இணைந்திருப்பது திருநெல்வேலிக்கு மேலும் பெருமைச் சேர்க்கிறது.

கூந்தன்குளத்தில் உள்ள குளம் மற்றும் ஊருக்குள் உள்ள மரங்களில் செவ்வரி நாரைகள் கூடமைக்கின்றன. அதுபோல் திருப்புடைமருதூரில் உள்ள நாறும்பூநாதர் கோவில் நந்தவனம் மற்றும் ஊரில் உள்ள மரங்களில் செவ்வரி நாரைகள் கூடமைக்கின்றன. இக்கிராம மக்கள் இப்பறவைகளை தங்கள் விருந்தாளிகளாகவும் மழையைக் கொண்டு வரும் தூதுவர்களாகவும் பார்க்கின்றனர்.

பறவைகள் கூடமைத்தால் விவசாயம் செழிக்கும் என்பதை அனுபவபூர்வமாக உணர்ந்துள்ளனர் இக்கிராம மக்கள்.

### செவ்வரி நாரைகள் பாதுகாப்பு

பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்புச் சங்கத்தால் வெளியிடப்பட்டுள்ள செம்பட்டியலில் அச்சுறு நிலையை அண்மித்த இனமாக செவ்வரி நாரை வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே இவற்றைப் பாதுகாக்க வேண்டியது காலத்தின் கட்டாயம். திடியூர் கிராம மக்கள் இந்தப் பறவைகளுக்கு இடையூறு செய்வதில்லை என்பது மகிழ்ச்சியூட்டும் செய்தி. ஆனால், இந்தக் கிராமத்தின் வழியாகச் செல்லும் உயர் மின் அழுத்த கம்பிகளில் அவ்வப்போது அடிபட்டு செவ்வரி நாரைகள் இறக்கின்றன. சுற்றுச் சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற துறையின் வழிகாட்டுதலின் படி இந்த உயர் மின் அழுத்த கம்பிகளில் பறவைகளை திசைத் திருப்பும் திசைமாற்றிகள் நிறுவ வேண்டும்.

இந்த நாரைகள் கூடமைத்துள்ள ஒரே ஒரு இலுப்பை மரம்தான் எங்கள் ஊரில் எஞ்சியுள்ளது, இது போன்ற நாட்டு மரங்களை அதிக அளவில் வளர்த்தால் பறவைகளுக்கு கூடு கட்ட வாய்ப்பளிப்பதோடு கிராமமும் பசுமையாக காணப்படும் என்று திடியூர் இளைஞர்கள்





தெரிவிக்கின்றனர். கிராம மக்கள் பறவைகளுக்கு தேவையான பாதுகாப்பினை அளித்து வந்தாலும் மரங்களிலிருந்து தவறி விழும் இளம் பறவைகளை அவர்களால் மீட்டு வளர்த்தெடுக்க இயலவில்லை என்ற வருத்தத்தை பதிவு செய்கின்றனர். பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிகளை தவிர இது போன்று மக்கள் வசிப்பிடங்களில் காணப்படும் பறவை வாழ்விடங்கள் போன்ற உயிரியல் வளங்களை பாதுகாக்க மற்றும் முறையாக மேலாண்மை செய்ய உயிரி பல்வகைமைச் சட்டம் 2002ல் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. இதன் படி திடியூர் ஊராட்சியிலும் உயிரி பல்வகைமை மேலாண்மைக் குழு உடனடியாக அமைத்து அக்குழுவிற்கு பறவைகள், அதன் வாழ்விடங்கள் மற்றும் பிற இயற்கைவளங்களை மேலாண்மை செய்ய போதுமான பயிற்சி வழங்கி அவர்கள் மூலமாகவே இப்பறவைகளின் வாழ்விடத்தை மேலும் வளப்படுத்த அரசு முன்வரவேண்டும். பல்லுயிர்களும் மக்களும் ஒத்திசைந்து வாழக்கூடிய திடியூர் போன்ற கிராமங்களே இன்று வரைக்கும் தாமிரபரணி பாய்ந்தோடும் நெல்லை மாவட்டத்தை செழுமையாகவும் உயிரோட்டமாகவும் இயங்க வைக்கிறது.

**மு. மதிவாணன் & அ. தணிகைவேல்**

அகத்தியமலை மக்கள்சார் இயற்கைவள காப்பு மையம், மணிமுத்தாறு, திருநெல்வேலி

**குறிப்பு:** இக்கட்டுரை முதலில் விகடன் தளத்தில் வெளியானது.



# நொறுங்கிய எனது வசந்த மாளிகை

ம. ஜியோ டாமின்

வாழ்க்கையில் எந்த இலக்குகளுமின்றி எனக்கே எனக்கேயான பிரச்சினைகளுடன் காற்றின் போக்கில் அலைந்த ஒரு காலத்தில் அப்பாவின் அழுத்தத்தின்பேரில் கல்லூரியில் கட்டுமானப் பொறியியலைத் தேர்ந்தெடுத்திருந்தேன். என்றாலும் நாளடைவில் அதில் கொஞ்சம் கொஞ்சமாய் ஆர்வம் தொற்றிக்கொள்ள அதுவே பின்னர் சிந்தனையும் பேச்சும் மூச்சுமாக மாறிவிட்டிருந்துது. ஒரு கட்டத்தில் கட்டுமானத் துறையில் பணிபுரியும் எவரொருவரையும்போலவே எனக்குள் எனக்கே எனக்கான ஒரு மாளிகை கட்டும் கனவு துளிர்விடத் தொடங்கியிருந்தது.

இளங்கலைப் பொறியியல் படித்து முடித்ததும் பெங்களூரில் ஒரு அடுக்குமாடிக் கட்டிடத்தின் கட்டுமானத்தில் சைட் எஞ்சினியராக வேலையில் சேர்ந்திருந்தேன். கிராமத்துப் பின்னணியிலிருந்து ஒரு பெருநகரத்திற்கு வந்து அதுவும் உயர்தட்டு வர்க்கத்தினருக்கான வீடுகளின் கட்டுமானங்களில் ஈடுபட்டிருந்த அனுபவம் எனக்குள் தீவிரமான தாக்கங்களை உருவாக்கத் தொடங்கியிருந்தது.

பொதுவாகவே கலை ஆர்வம் இருந்த எனக்கு, வீடுகளின் உள்ளலங்கார வடிவமைப்புகளில் (Interior design and decoration) அதீத ஆர்வம் தொற்றியிருந்தது. அப்போது மிகப்பிரபலமாக இருந்த உள்ளலங்காரங்கள் குறித்தப் பல்வேறு பருவ இதழ்களைப் பொக்கிஷம்போல வாங்கி வாசிக்கத் (படம் பார்க்கத்) தொடங்கியிருந்தேன். பார்க்கும் கட்டிடங்களின் உள்ளலங்காரங்களில் எல்லாம் மிகச்சிறந்தவையும் கவர்ச்சிகரமுமாக இருந்தவை எல்லாம் என் கனவில் உருவாகிக்கொண்டிருந்த எனக்கே எனக்கான கனவு மாளிகையில் இடம்பிடிக்கத்

தொடங்கின. "இப்படித்தான் இருக்க வேண்டும் எனது வரவேற்பறை, இப்படித்தான் இருக்க வேண்டும் கதவுகள், இப்படித்தான் இருக்க வேண்டும் சுவர்கள்..." என்று எனக்குள் உருப்பெற்று வந்த அந்த கனவு இல்லமானது என் வாழ்விற்கும் ஓட்டத்திற்கும் புதிய அர்த்தத்தைக் கொடுக்கத் தொடங்கியது.

தொடர்ந்து முதுகலைப் பொறியியல் படிக்கச் சென்று அடுத்து கட்டுமான வடிவமைப்புத் துறைக்கு மாறிவிட்ட போதிலும் எனக்குள் உருப்பெற்று வந்த கட்டிடம் பழையன களை ந்து புதியன புகுவதுபோல புதிது புதிதாய் நான் தெரிந்துகொண்ட அம்சங்களை உள்ளடக்கி புதுப்பொலிவு பெற்று வளர்ந்து வந்தது. ஒரு கட்டத்தில் என் கனவிலிருந்த வசந்த மாளிகையை வரைபடமாக்கி அதற்கு உயிரூட்டவும் தொடங்கிவிட்டேன்.

அந்த 'சிறிய' மாளிகை வெளிப்புறத்தில் மைசூர் அரண்மனைபோன்று கம்பீரமா கவும் உட்புறமோ உயிரோட்டமுள்ள திருவாங்கூர் அரண்மனைபோன்றும் இருந்தது. அதன் பின்புறம் ஒரு விசாலமான புல்வெளியுடன்கூடியத் தோட்டம் இருந்தது. அந்தத் தோட்டத்தின் நடுவே ஒரு சிறிய செயற்கை நீரூற்றுடன்கூடிய அல்லிக் குளமும் அதில் மீன்களும் நீந்திக்கொண்டிருந்தன. சுற்றிலும் வெண்ணிற அன்னங்கள் வலம்வந்து கொண்டிருந்தன. வீட்டின் பின்புறம் இருந்த சுவர்களால் மறைக்கப்படாத உணவு உண்ணும் அறை, தோட்டத்தை நோக்கியவாறு அமைந்திருந்தது. தோட்டத்தின் எஞ்சிய மூன்று பக்கங்களிலும் நீண்ட திண்ணைபோன்ற ஓட்டுக் கூரை வேய்ந்த திண்ணை சூழ்ந்திருந்தது. திண்ணையின் சுவர்களில் அற்புதமான வேலைப்பாடுகள் கொண்ட ஓவியங்களும் பழங்காலக் கலைப்பொருட்களும் பதிக்கப் பட்டிருந்தன. நீண்ட விசாலமான அந்தத் திண்ணையை கற்தூண்களும் மரத்தாலான உத்திரங்களும் தாங்கி நின்றன. மேலேயிருந்து பார்த்தால் அந்த விசாலமான தோட்டம் வீட்டோடு திண்ணையால் இணைக்கப்பட்டு காரைக்குடி வீடுகளின் நடு முற்றம்போல அமைந்திருந்தது. இந்த தோட்டமே அந்த கனவு மாளிகையின் ஆன்மாவாக அமைந்திருந்ததால் நான் என் ஓய்வு நேர்த்தையும் வேலை நேரத்தையும் கழிப்பதற்கான எல்லாமுமாக அதுவே இருந்தது. வீட்டின் படுக்கையறைகளும்கூட குட்டி நூலகமும்கூட தோட்டத்தை நோக்கியபடி விசாலமான பால்கனிகளைக் கொண்டிருந்தன.

புதிய புதிய கற்றல் அனுபவங்களோடும் அவதானிப்புகளுடனும் வரைபடம் ஒவ்வொரு நாளும் திருத்தப்பட்டு முழுமை பெறத் தொடங்கவும் விரிவான மதிப்பீடும் தயாரிக்கத் தொடங்கினேன். தோசையை விட இட்டிலி விலை மலிவு என்று வயிற்றை நிறைக்க எனக்குப் பிடிக்காத இட்டிலியை உண்ணும் 'பேச்சிலர்' வாழ்க்கைச் சூழலில் இருந்தபோதும்கூட, யாரை வைத்துக் கட்டுமானங்கள் செய்வது வேலையாட்கள் எங்கிருந்து வருவார்கள் எங்கே தங்குவார்கள் கட்டுமானப் பொருட்கள் எங்கே வாங்குவது என்பது வரையிலும் சிந்தனைகள் நீண்டன. அந்த கனவு மாளிகையில் அடுக்குவதற்கான கலைப்பொருட்களும்கூட வீட்டில் சேகரமாகத் தொடங்கின. நான் சென்னைப் பெருநகரில் இப்போது வாழ்ந்துகொண்டிருந்தாலும்கூட என் ஆன்மா நிலைகொண்டிருந்த என் சொந்த கிராமத்திலேயே என் மாளிகையும் உருவாகிக்கொண்டிருந்தது.

இந்த சூழலில்தான் திருமணமும் தொடர்ந்து கூடங்குளம் அணுவுலைக்கு



எதிரான போராட்டமும் எனக்கு பூவுலகின் நண்பர்களோடான அறிமுகமும் சூழல் குறித்த விரிவான வாசிப்பும் துளிர் விட்டுக்கொண்டிருந்தது. எனது வாசிப்பு ஒவ்வொரு கட்டமாக நகர்ந்து, ஆனி லியோனர்டின் 'பொருட்களின் கதை' புத்தகத்தை என் சிந்தனைகள் ஆக்கிரமிக்கத் தொடங்கியிருந்தபோதுதான் அந்தக் கனவு மாளிகை சரிந்து விழத் தொடங்கியது.

ஆபரணத்துக்கான தங்கம் எப்படி எடுக்கப்படுகிறது என்று ஒருவர் ஒரு முறை அறிந்துகொண்டால் (அவர் சமூக - சூழல் அக்கறையும் உள்ளவராக இருப்பின்) அவருக்குத் தங்கத்தின்மீது கடும் வெறுப்பு வந்துவிடுமென்றும் அவர்கள் ஒருபோதும் அதன்மீது ஆசைகொள்ள மாட்டார்கள் என்றும் சொல்வார்கள். என் நினைவு தெரிந்த நாளிலிருந்தே தங்கச் சங்கிலி மற்றும் மோதிரம் அணிந்தே பவனி வந்திருந்த நான் 'பொருட்களின் கதை' வாசிப்பினூடாக இனியெப்போதும் தங்க ஆபரணங்கள் உட்பட அத்தியாவசியமற்ற கைக்கடிகாரம்கூட அணிவதில்லையென்ற முடிவிற்கு வந்திருந்தேன். அப்போதுதான் திருமணமாகியிருந்த சூழலில் எனது 'அந்தஸ்த்தையும் கெத்தையும்' காட்டுவதற்கான ஒன்றை நான் தவிர்ப்பது என் மனைவிக்கு மட்டுமின்றி எனக்குமேகூட சங்கடம் தருவதாகவே இருந்தது. என்றாலும் என்னைப்போன்ற இத்தகைய 'பிரிவிலேஜ்ட்களின் எளிமை'கூட ஒரு சமூக மூலதனம்தான் என்பதையும் நான் பின்னாளில் உணர்ந்துகொண்டேன். அதாவது எல்லா வசதிகளும் வளங்களும் வாய்க்கப்பெற்ற ஒருவர் சற்று எளிமையைக் கடைபிடிப்பதால் உண்மையில் அவர் இழப்பதாய் எண்ணும் எதனையும் இழப்பதில்லை என்பதோடு, அதுவேகூட ஒரு மதிப்பாகவும் கெத்தாகவும் விரைவில் மாறிவிடுகிறது.

பொருட்களின் கதை என்னை ஆக்கிரமிக்க ஆக்கிரமிக்க நான் உற்பத்திப் பொருட்களின் (நுகர்பொருட்களின்) சூழல் தாக்கம் குறித்து அதீத கவனம் செலுத்தத் தொடங்கியிருந்தேன். இந்தச் சூழலில் எனது கனவு மாளிகை கொஞ்சம் கொஞ்சமாக என் மனதிற்குள்ளேயே சிதிலமடைடைந்து உடைந்து நொறுங்கத் தொடங்கியது. என்றாலும் இது என் வாழ்விற்கு முன்பு கொடுத்திருந்த எந்த அர்த்தத்தையும் இப்போது கெடுத்துவிடவில்லை. மாறாக புத்தம்புதிய அதிக நியாயமான அர்த்தங்களை உருவாக்கிக்கொண்டிருந்தது. அதே காலகட்டத்தில் நாங்கள் குடியிருந்த வாடகை வீட்டில் வீட்டு முதலாளியால் பல்வேறு இன்னல்களை சந்தித்து வந்த நிலையில், புறநகர்ப் பகுதியில் ஒரு அடுக்கத்தில் வீடு *(flat)* வாங்குவது என்று முடிவு செய்தோம். சென்னையில் அதுவரையில் வீடு வாங்கிக் குடியேறும் எண்ணமோ அதற்கான சேமிப்புகளோ வருவாயோ அப்போது இல்லையென்றாலும் வங்கிக் கடனின் தயவோடு விரைவாகவே அந்த காங்கிரீட் கட்டிடத்தில் குடியேறினோம். விசாலனமானதொரு தோட்டத்திற்கான கனவு ஆறுக்கு ஆறு அடி பால்கனியாகவும் மற்றவர்கள் என்ன சொல்வார்களோ என்று தயக்கத்தோடே உருவான சிறு மாடித்தோட்டமாகவும் சுருங்கிப் போனது.

இந்த நாட்களில், எனது கவனம் நான் கல்லூரி காலத்தில் என் தனிப்பட்ட ஆர்வத்தினால் தெரிந்துகொண்டிருந்த மரபுக் கட்டுமானங்கள் மற்றும் லாரி பேக்கர் பாணியிலான கட்டுமானங்களைக் கூடுதலாக அறிந்துகொள்வதை நோக்கித் திரும்பியது. அதுபற்றி அதிகம் வாசிக்கவும் அவ்வப்போது சமூக வலைதளங்களில் எழுதவும் தொடங்கினேன். இதுவே



செத்துப்போயிருந்த எனது காங்கிரீட் கனவு மாளிகைக்கு மீசையும் மருவும் வைத்து மரபுக் கட்டுமான வீடாக மாற்றத் தொடங்கியது. என்றாலும் இது எனது ஆசையே அன்றி தேவையல்ல என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ளும் நிலையை நான் இப்போது அடைந்துவிட்டிருந்தேன். ஆம், ஆர்கானிக் சர்க்கரை என்றால் எப்படி வாய் நிறைய அள்ளித் தின்னவேண்டியதில்லையோ அப்படியே மரபுக் கட்டுமானமும்கூட என்று புரிந்துகொண்டிருந்தேன்.

இன்றும்கூட எனக்குள்ளேயே இருக்கும் ஒரு சூழல் நலன் விரும்பியும் நுகர்வு மோகியும் அடிக்கடி மோதிக்கொள்ளும் களமாக இது அமைந்திருக்கிறது. அந்த நுகர்வு மோகி வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் 'சின்னதாய்' ஒரு 'எளிய' வீட்டிற்கான கனவை என்னுள் தூண்டிக்கொண்டே இருக்கிறான். நான் அதனை நிராகரித்து விடாதிருப்பதற்கான நியாயங்களை அவன் எப்போதும் தயாராய் வைத்திருக்கிறான். இந்த நியாயங்களோடு கூடவே 'நாலுபேரடங்கிய' நம் சமூகத்தின் அழுத்தம் வேறு. எப்போதெல்லாம் நான் மரபுக் கட்டுமானங்களிடம் நெருங்கிச் செல்கிறேனோ அப்போதெல்லாம் இந்த 'புதிய மரபு மாளிகைக்கான' நியாயங்கள் உக்கிரமாகின்றன. ஆனால், ஏராளமான இந்த நியாயங்களுக்கு எதிராக என்னுள் இருக்கும் சூழல் நலன் விரும்பிக்கு இருக்கும் ஒரே நியாயம் என்னவென்றால்,'என்னதான் இருந்தாலும் ஒரு மனிதனுக்கு இரண்டாவது வீடு' என்பது ஒரு அநியாயம் என்பதே!

சற்று ஆழமாக உற்றுநோக்கும்போது புறச்சூழல்களின் அழுத்தத்தைப் புறந்தள்ளிவிட்டால் - எனக்குள் எழும் பேராசையை - என்னால் மிக எளிதாகவே புறந்தள்ளிவிட முடிகிறது. கலைப் பொருட்களை வாங்கிக் குவிக்கும் ஆவல் கொண்டவனாய் இருந்த நான் இப்போது என்னைச் சுற்றிலும் குவிந்துகிடக்கும் குறைந்தபட்சப் பொருட்களையும்கூட வெறுப்பவனாய் மாறியிருக்கிறேன். பலரும் வியக்கும் பிரம்மாண்டங்கள் என்னைக் கடுப்பேற்றுகின்றன. வீட்டின் வரவேற்பறையில் இருக்கும் மெத்தென்ற 'சோபா', 'டைனிங் டேபிள்' என எனது பெரும்பாலான நுகர்பொருட்கள் என்னைக் குற்றவுணர்வுக்கு உள்ளாக்கும் சுமையாகிப் போயின. தினமும் தண்ணீர் தேவைப்படும் ஒரு பூச்செடிகூட என் கண்களுக்குக் குளிர்ச்சியாய் இல்லை.

நான் மிகவும் விரும்பி வாங்கியக் கைக்கடிகாரம் (பின்னாளில் அதனை நண்பருக்குக் கொடுத்துவிட்டேன்) மட்டுமின்றி வாசித்து முடித்த - வாசிக்காத புத்தகங்கள்கூட இப்போது சுமையாகிப் போயின. புத்தகங்களை வாங்கிக் குவித்து அடுக்கி அழகு பார்த்த நான் அவற்றை அள்ளி வழங்கி என் சுமையைக் குறைத்துக் கொள்பவனாகிவிட்டேன். "எப்படி



இவ்வளவு நல்ல புத்தகங்களையெல்லாம் தூக்கி குடுக்குறீங்க?" என்று பலரும் கேட்கிறார்கள். மீண்டும் மீண்டும் தேவைப்படும் என்ற புத்தகங்களைத் தாண்டி பெரும்பாலான புத்தகங்களை நான் கொடுத்துவிட்டிருந்தேன். என்னால் இதை எப்படிச் செய்ய முடிந்தது என்று எனக்கே சற்று வியப்பாக இருந்தது. உண்மையில் நான் எதனையும் இழக்கவில்லை என்பதையும் என்னை அழுத்திக்கொண்டிருந்த எனது நுகர்பொருட்களின் சுமையிலிருந்து தப்பித்துக் கொண்டிருக்கிறேன் என்பதையும் ஆழமாய் உணர்ந்தேன்.

என்றாலும், இது எப்போதும் எளிதான முடிவாக இல்லை. எதையாவது

மனிதர்களை அவர்களுடைய கலாச் சாரமும் பண்பாடுமே விலங்குகளிடமிருந்து வேறுபடுத்துகிறது. விலங்குகளைப்போல மனிதர்கள், இயல்பூக்கங்களின்மீது பழிபோட்டு தப்பித்துவிட முடியாது.

தேடுவதற்காய் அமேசானின் ஆன்லைன் அலமாரிகளைத் துழாவும்போது சில நேரங்களில் எனக்குள் எங்கோ உறங்கிக் கொண்டிருக்கும் ஒரு மிருகம் விழித்துக் கொள்கிறது. கிறிஸ்தவ நம்பிக்கையின்படி பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஏவாளிடம் விலக்கப்பட்ட கனியை நீட்டி - அவளுக்கு நுகர்வு போதையேற்றி - அவளைக் கடவுளுக்கு எதிரான முதல் பாவத்தை செய்யத் தூண்டிய அந்த ஆதி பாம்பு, என்னையும் சூழ்ந்து கொள்கிறது. நான் இப்படி ஒரு போதையூட்டும் - ஏமாற்றும் பொருளாதார வலையில் சிக்கிக்கொண்டிருக்கிறேன் என்பதை உணரவே எனக்கு சில நிமிடங்கள் பிடிக்கிறது.

சில நேரங்களில் விழித்துக் கொள்வதற்கு முன்பே சில பொத்தான்களைச் சொடுக்கி எளிமையாகிப்போன 'Gpay' பணப்பரிவர்த்தனையை முடித்து அந்தப் பாம்பிடம் நான் தோற்றுப்போகிறேன். உயிரியல் ரீதியாக என்னில் சூழல் விழிப்புணர்வு என்னிடம் எந்த மாற்றத்தையும் உருவாக்கிடவில்லை. நான் இன்னும் ஏவாளின் அதே பலவீனமான மரபணுக்களையே சுமந்து கொண்டிருக் கின்றேன். ஒரு ஆப்பிளைக்காட்டி என்னை ஏமாற்றிவிட முடியாது என்றாலும்கூட ஒரு 'கிரீமி ஜிகர்தண்டாவால்' என்னை வீழ்த்திவிட முடியும்.

ஆனாலும், இனி ஒருபோதும் ஒரு மாளிக்கான கனவை என்னால் சுமக்க முடியாது. அதன் பிரம்மாண்டமும் சூழல் தாக்கமும் தரும் அழுத்தத்தை என்னால் தாங்கவே முடியாது. எனக்குக் கிடைத்த இந்த விழிப்பே போதுமானது என்று கருதுகிறேன்.

தங்களை வெளிக்காட்டிக் கொள்வதற் காக நுகர்பொருட்களை வாங்கிக் குவிக்கும் மனிதர்களை நான் கடந்த காலங்களில் சற்றுக் கடுமையாகவே அணுகியிருக்கிறேன். என் பலவீனங்களையும் மனிதரின் இயல்பூக்கங்களையும் ஆழமாகப் பார்க்கும்போதுதான் இதனை சற்று கனிவோடு அணுகியிருக்கலாமோ என்று தோன்றுகிறது. கெத்தாக வெளிப்படுத்தலுக்கான உணர்வானது கையாள்வதற்கு சவாலான மனிதரின் இயல்பூக்கம் என்று புரிந்து கொண்டிருக்கிறேன். என்றாலும் மனிதர்கள் தங்கள் பழைய மாளிகைகளை உடைத்து புதிய அர்த்தங்களைத் தம் வாழ்வில் வரிந்துகொள்ள முடியுமென்று என் அனுபவம் எனக்கு உணர்த்துகிறது.

மனிதர்களை அவர்களுடைய கலாச் சாரமும் பண்பாடுமே விலங்குகளிடமிருந்து வேறுபடுத்துகிறது. விலங்குகளைப்போல மனிதர்கள், இயல்பூக்கங்களின்மீது பழிபோட்டு தப்பித்துவிட முடியாது. பாலியல் வல்லுறவில் ஈடுபடும் ஒரு குரங்கின் இயல்பூக்கமானது ஆடம்பர - சொகுசு நுகர்பொருட்களை வாங்கும் மனிதனின் இயல்பூக்கத்தை நியாயப்படுத்திவிட முடியாது. நாம் கலாச்சாரத்தாலும் பண்பாட்டாலும் ஒழுக்க விதிகளாலும் ஒட்டுமொத்தத்தில் சிந்தனையால் வழிநடத்தப்படுபவர்களாய் இருப்பதாலேயே மனிதர்களாய் இருக்கிறோம்.

நம் இயல்பூக்கங்களை வெல்ல ஆழமான விழிப்புணர்வு தேவைப்படுகிறது. நம் இயல்பூக்கங்கள் பெருநிறுவனங்களின் நலன்களுக்காகக் கையாளுகை செய்யப்படுகின்றன என்று நாம் உணர வேண்டியிருக்கிறது. இந்த உணர்வு நொறுக் கும் மாளிகைகளின் எச்சங்களில்தான் நம் வாழ்வு துளிர்க்க முடியும்.




# அதிகரிக்கும் வெப்ப அலை அலட்சியப்படுத்தும் அரசு

லோகேஷ் பார்த்திபன்

இந்தியா, அதன் மிக நீண்ட மற்றும் கொடூரமான கோடையை நடப்பாண்டில் சந்தித்துக் கொண்டிருக்கிறது. இந்தியாவில் உள்ள 36 வானிலை ஆய்வு துணை நிலையங்களில் 14 துணை நிலையங்களில் கடந்த மார்ச் 1 முதல் ஜூன் 9 வரை 15 நாட்களுக்கு மேல் வெப்பஅலை பதிவாகியுள்ளது. வடகிழக்கு மாநிலங்களையும், கடலோர கர்நாடகப் பகுதியையும் தவிர்த்து நாடு முழுவதும் வெப்பஅலை வீசியுள்ளது. அதிகபட்சமாக ஒடிசா மாநிலத்தில் 27 நாட்களும், ராஜஸ்தானில் 23 நாட்களும், மேற்கு வங்கத்தில் 21 நாட்களும், ஹரியானா, டெல்லி. பஞ்சாப், உத்தர பிரதேசம் முதலிய மாநிலங்களில் 20 நாட்களும் வெப்ப அலை பதிவாகியுள்ளது. தமிழ்நாட்டில் 14 நாட்கள் வெப்ப அலை வீசியுள்ளது. பனிப் பிரதேசங்களான ஜம்மு & காஷ்மீர், ஹிமாச்சல் மற்றும் உத்தரகாண்ட் மாநிலங்களிலும் வெப்ப அலைகளால் பாதிப்பிற்குள்ளாகின.

எப்போதுமே எல்-நினோ வானிலை நிகழ்வு விலகத் தொடங்கும்போது வெயிலின் தாக்கம் அதிகரிக்கும். வளிமண்டல சுழற்சி, தடக்காற்றில் மாற்றம் ஏற்படுவது போன்ற




காரணங்களால் வெயில் அதிகம் வீசும். தற்போது இதனுடன் புவி வெப்பமாதலும் சேர்ந்து வெயிலின் தாக்கம் நீடித்தும், வலுப்பெற்றதுமாய் மாறியுள்ளது. நம்மிடம் உள்ள தரவுகளின் அடிப்படையில் அதிகம் வெப்பம் பதிவான ஆண்டாக கடந்த 2023ஆம் ஆண்டு உள்ளது. தற்போது வீசும் வெப்பமானது கடந்த ஆண்டின் அளவைவிட அதிகரிக்கக்கூடும் என ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். 'Global Annual Temperature Outlook' அறிக்கையின்படி, அதிக வெப்பம் பதிந்த ஆண்டாக 2024-ம் ஆண்டு இருப்பதற்கு 21.7% வாய்ப்புள்ளதாகவும், அதிக வெப்பம் பதிந்த முதல் 5 ஆண்டுகளில் 2024 இருப்பதற்கு 99.1% வாய்ப்பு உள்ளதாகவும் தெரிகிறது [1]. ஏற்கனவே, 2024, மே மாதத்தில் அதிகம் வெப்பம் பதிவான மே மாதமாக இருக்கின்றது. இதற்கு முன் அதிக வெப்பம் பதிவான மே மாதமாக கடந்த 2023 மே மாதம் இருந்தது குறிப்பிடத்தக்கது. வடஇந்தியாவைப் பொறுத்தவரை 2024 ஜனவரி வறட்சியான மாதமாக பதிவாகி இருந்தது குறிப்பிடத்தக்கது [2].

வெப்பஅலைகளால் உயிரிழப்புகள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இதுவரை இந்தியா முழுவதும் வெப்பஅலையின் பாதிப்புகளால் மட்டுமே 100க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். பதிவாகாத உயிரிழப்புகளையும் சேர்த்தால் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும்.

விருதுநகர் ஆவியூரில் நடந்த குவாரி வெடிவிபத்து தொடர்பான சேகரிக்கச் சென்ற செய்தியாளர் வெயிலின் தாக்கத்தால் மே 2 அன்று உயிரிழந்தார். இப்படித் தமிழ்நாட்டில் பல மரணங்கள் ஏற்பட்டன. கடந்த ஜூன் 12 அன்று உத்தரபிரதேசம், ஹரியானா, டெல்லி, பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் பெரும்பாலான பகுதிகளில் வெப்பஅலை தீவிர வெப்பஅலையாக பதிவாகி இருந்தது. இப்பகுதிகளில் இரவு நேரங்களில் 45- 47°C அளவு பதிவாகி இருந்தது. நாட்டிலேயே அதிகபட்சமாக டெல்லியில் கடந்த மே 29 அன்று சுமார் 52.9°C (127°F) அளவு பதிவாகி இருந்தது. டெல்லியில் இரவு நேரங்களில் சராசரியை விட 2.5°C அதிகமாகவும், பகல் நேரங்களில் 5°C அதிகமாகவும் மே மாதத்தில் வெப்பம் பதிவானது. ராஜஸ்தானிலும் வெப்பநிலை மே மாதத்தில் 50°C-யை மூன்று நாட்கள் நெருங்கியது. பெருநகரங்களில் வெப்பநிலை அளவு (Heat index) 41°C தாண்டியது. இந்த அளவு மிகவும் ஆபத்தான அளவாகும். Heat index என்பது காற்றின் வெப்பநிலையும், ஈரப்பதத்தையும் சேர்த்து கணக்கில் கொள்வது. இந்த heat index கடந்த 10 ஆண்டுகளாகவே 2001 - 2010 ஆண்டு சராசரியை விட அதிகரிக்கவே செய்துள்ளது. இதன் காரணமாக சென்னையில் 37°C வெப்பம் வீசினாலும் நமக்கு அதிகமாக உணரப்படும். இந்த Heat index அடிப்படையில் டெல்லி, மும்பை, பெங்களூரு, கொல்கத்தா போன்ற பெருநகரங்களைவிட சென்னையில் அதிக வெப்பம் உணரப்பட்டது என Centre for Environment and Science வெளியிட்ட அறிக்கை கூறியுள்ளது. இந்த ஆய்வறிக்கையில் முக்கியமாக நகரமயமாக்கல், அதிகரிக்கும் வெப்பநிலைக்கு முக்கியப் பங்காற்றி வருகிறது எனக் கூறியுள்ளது. இந்த ஆய்வறிக்கையின்படி, சென்னையில் 2003இல் 34% இருந்த பசுமைப் போர்வை

2023ல் 20.3% குறைந்துள்ளது. அதேகாலக் கட்டத்தில் கட்டடங்களின் அளவு 30.7% இருந்து 73.5% ஆக உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இதுவரை வடஇந்தியப் பகுதிகளை அதிகம் பாதித்து வந்த வெப்பஅலை இனி வரும் காலங்களில் தென்இந்தியப் பகுதிகளையும் பாதிக்கும் என 2022-ம் ஆண்டு இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது. 2015 ஆண்டு நிலவரப்படி, இந்தியாவில் 17 மாநிலங்கள் வெப்பஅலைகளால் பாதித்து வந்தது. தற்போது அந்த பட்டியல் 23 ஆக உயர்ந்துள்ளது. இவை ஒரு இரவில் நடந்த மாற்றமில்லை. கடந்த சில ஆண்டுகளாகவே வெப்பநிலை அதிகரிப்பை நாம் உணர்ந்து வருகிறோம். கடந்த 2022 ஏப்ரலில், 122 ஆண்டுகளில் இல்லாத அளவான வெப்பம் பதிவானது. கடந்த ஜூன் 2023 முதல் மே 2024 வரை தொடர்ச்சியாக 12 மாதங்கள் அதிக வெப்பம் பதிவானது. காலநிலை மாற்றத்தால் பூமி வெப்பமடைந்து வருவதை நாம் இதன் மூலம் உணர்ந்து கொள்ளலாம். தொழிற்புரட்சி காலத்திற்கு முன்பு நிலவிய சராசரி வெப்பநிலையைவிட தற்போது பூமியின் வெப்பநிலை 1.48°C உயர்ந்திருப்பதாக உலக வானிலை அமைப்பு தெரிவிக்கிறது.

இந்த கடுமையான வெப்பஅலை நாட்களுக்கு இடையேதான், நாடாளுமன்ற தேர்தல் ஏப்ரல் 19 முதல் ஜூன் 1 வரை நாடு முழுவதும் 7 கட்டங்களாக நடத்தப்பட்டது. எல்-நினோ எனும் வானிலைத் தன்மை விலகத் தொடங்கியிருப்பதாக அறிவியலாளர்கள் தெரிவித்திருந்தனர். இதன் காரணமாக கோடையின் வெப்பம் இயல்பைவிட அதிகமாக வீசும் என்று தேர்தல் தேதி அறிவிக்கும் முன்னரே இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது. ஆனால், இந்திய வானிலை ஆய்வு மையம் கூறியதைப் பொருட்படுத்தாமல், பாரதீய ஜனதா கட்சி தங்களது தேர்தல் பரப்புரைகளை தங்கள்

**தொழிற்புரட்சி காலத்திற்கு முன்பு நிலவிய சராசரி வெப்பநிலையைவிட தற்போது பூமியின் வெப்பநிலை 1.48°C உயர்ந்திருப்பதாக உலக வானிலை அமைப்பு தெரிவிக்கிறது.**

வசதிக்கேற்ப நடத்த ஏதுவாக 7 கட்டங்களாக தேர்தலை அறிவித்து நடத்தியது இந்திய தேர்தல் ஆணையம்.

இதன் விளைவாக வட மாநிலங்களில் மே 31 அன்று, வெப்பஅலைகளால் உயிரிழந்த 40 பேர்களில் 25 பேர் தேர்தல் பணிகளில் ஈடுபட்டவர்களும் இறந்திருந்தனர். உயிழிந்த தேர்தல் பணியாளர்கள் உத்திர பிரதேசம் மற்றும் பீகாரில் வெவ்வேறு இடங்களில் பணியாற்றிக் கொண்டிருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதை எதையுமே பொருட்படுத்தாத, அறிவியல் முறையில் பிறக்காத நம் பிரதமர் ஜூன் 2 அன்று கன்னியாகுமரியில் ஆழ்ந்த தியானத்தில் ஈடுபடச் சென்றுவிட்டார். புவி வெப்பமயமாதலால் உருவான வெப்ப அலையுடன் பிரதமர் மோடி தலைமையிலான





ஒன்றிய அரசின் மெத்தனமும் ஒவ்வொரு உயிரிழப்பிற்கும் காரணமாக அமைந்தது.

தேர்தல் காலத்தில் இந்தியா முழுவதும் உள்ள அரசு கட்டமைப்பு முற்றிலும் தேர்தல் பணியில் ஈடுபடும். மேலும், பிரச்சாரங்கள், பொதுக்கூட்டங்கள் என மக்கள் ஈடுபடுவார்கள். கோடை வெப்பத்தினால் மக்கள் கடும் பாதிப்புக்கு உள்ளாவர்கள் என ஏப்ரல் மாத பூவுலகு மாத இதழில் தலையங்கம் எழுதப்பட்டிருந்தது நினைவுகூரத்தக்கது. பொதுமக்களின் வாழ்க்கையையும், காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்பையும் மோடி அரசு எப்போதும் பொருட்படுத்தாது என்பதற்கு மேலும் ஒரு சாட்சியாக நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தல் அமைந்துள்ளது.

கடும் பாதிப்பை ஏற்படுத்துகின்ற வெப்பஅலை நிகழ்வுகளை தேசியப் பேரிடராக ஒன்றிய அரசு அறிவிக்க வேண்டும். இந்த வெப்பஅலைகளின் பாதிப்பை பற்றிய விழிப்புணர்வு பொது மக்களுக்கு உடனடியாகக் கொண்டு செல்ல ஒன்றிய அரசும் மாநில அரசும் வழிவகை செய்ய வேண்டும். இந்த வெப்பஅலைகளால் நேரடியாகவும், அதிகமாகவும் பாதிக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு அதிக வெப்பம் வீசும் காலங்களில் அவர்களுக்கான பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகளும், பாதிப்புகள் ஏற்படும்போது உரிய இழப்பீடும் விரைந்து கிடைப்பதை உறுதி செய்யவேண்டும். வெப்ப அலைகள் உலகம் முழுக்க பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது என்று பேசி வரும் நாம், நம்மிடையேயும், மறைமுகமாக பெரும் பாதிப்பை வெப்பஅலைகள் ஏற்படுத்தி வருகிறது என்பதை உணர வேண்டும். காலநிலை மாற்ற பாதிப்பை குறைப்பதற்கான நடைமுறைகளை ஒன்றிய அரசும், மாநில அரசும் காலதாமதமின்றி உடனடியாக நிறைவேற்ற வேண்டும்.

***Lokeshparthipan57@hotmail.com***

***Reference***


- *https://www.ncei.noaa.gov/access/monitoring/monthly-report/global/202401*
- *https://www.downtoearth.org.in/news/climate-change/after-snowless-december-and-january-march-and-april-to-rain-fire-on-north-india-experts-94103*
- *https://www.hindustantimes.com/india-news/india-experiencing-one-of-its-longest-and-deadliest-summers-shows-imd-data-101718282125109.html*
- *https://www.downtoearth.org.in/news/climate-change/northern-hemisphere-2023-summer-warmest-in-two-millennia-study-calls-for-urgent-greenhouse-gas-reduction-96152*
- *https://www.downtoearth.org.in/news/climate-change/the-million-dollar-question-what-can-soothe-indians-from-blistering-heatwaves--96584*
- *https://www.downtoearth.org.in/news/climate-change/climate-change-responsible-for-over-80-of-temperature-rise-within-asia-last-month-the-hottest-april-ever-wwa-96153*
- *https://mausam.imd.gov.in/imd_latest/contents/ar2022.pdf*

# கம்யூனிசம்: கருத்தியலும் கள யதார்த்தமும்!

அகிலன் பாலகுரு

மனிதன் இயற்கையினால் வாழ்கிறான் – அதாவது இயற்கைதான் அவனது உடல் – மேலும் அவன் சாகாமல் இருக்கவேண்டுமென்றால் அவற்றுடன் தொடர்ச்சியாக உரையாடலை மேற்கொண்டு வரவேண்டும். மனிதனின் பௌதிக / புற மற்றும் அக வாழ்வானது இயற்கையுடன் இணைந்தது என்பதை எளிதாகச் சொல்வதென்றால், இயற்கை அதனுடையே இணைக்கப்பட்டிருக்கிறது, மனிதன் இயற்கையின் ஒரு பகுதி.

– மார்க்ஸ்,1844



இயற்கையுடன் மனிதன் கொண்டுள்ள உறவை மிகத் தெளிவாக உணர்ந்திருந்தார் மார்க்ஸ். இயற்கைதான் அனைத்திற்கும் பிரதானம் என்றும் அதனாலேயே மனிதன் வாழ்வதாகவும், மனிதனின் புற உடலாக இருப்பதே இயற்கை என்றும் கூறினார் மார்க்ஸ். அதாவது மனிதனின் இயக்கத்திற்கு உதவும் உறுப்புகளை (கண், கை, கால், குடல் போன்றவை) கொண்டதாக மனித உடல் இருப்பது போலவே மனிதனின் இயக்கத்திற்கு தேவையான காற்று, நீர், உணவு போன்றவற்றை உள்ளடக்கிய இயற்கையும் மனிதனின் புற உடலாக அறியப்படுகிறது. மனிதன் இயற்கையோடு கொண்டுள்ள உறவானது இயற்கை தன்னோடு தானே கொண்டுள்ள உறவைக் குறிக்கிறது என்றும் இயற்கையின் ஒரு பகுதியே மனிதன் என்றும் மார்க்ஸ் அழகாக விளக்குகிறார். இயற்கை குறித்து இத்தனை கருத்தியல் தெளிவுடன் இருந்த மார்க்ஸின் தத்துவ அடிப்படையில் கம்யூனிச அரசை நிர்மாணித்த, நிர்மாணிக்கப் போராடும் நாடுகளும் தலைவர்களும் தோழர்களும் எத்தனை தூரம் இயற்கையின் மீதான புரிதலோடு செயலாற்றி வருகின்றனர், வந்து இருக்கின்றனர் என்று வரலாற்றை சற்றுப் புரட்டி பார்த்தால் வேதனைதான் மிஞ்சுகிறது. அழிவையேத் தொழிலாக ஏற்று இயற்கையின் சிதைவில் லாபத்தை அனுபவித்து வரும் முதலாளிய சமூகத்தின் செயல்பாடுகளுக்கு சற்றும் குறையாமல் இயற்கையைச் சுரண்டுவதன் மூலம் அதன் ஒரு அங்கமான மனிதனையும் சுரண்டி பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிலைநிறுத்த பெரிதும் போராடியுள்ளனர் சமத்துவ உலகைப் படைக்க எத்தனித்த கம்யூனிச கடவுள்கள்.

### சோவியத்தின் கதை

ரஷ்யப் புரட்சியின் விளைவாக ஆட்சிக்கு வந்த கம்யூனிஸ்ட்கள் சோவியத் ஒன்றியத்தைக் கட்டமைத்தனர். ரஷ்யா, உக்ரைன், பெலாரஸ், கஜகஸ்தான், உஸ்பெகிஸ்தான், ஆர்மீனியா, அஜர்பைஜான் போன்ற பல நாடுகளின் கூட்டமைப்பில் சோவியத் ஒன்றியம் உருவாக்கப்பட்டது. அவற்றில் சில நாடுகள் தாமாகவே முன்வந்து சோவியத் ஒன்றியத்தில் தங்களை இணைத்துக் கொண்டன சில வலுக்கட்டாயமாக சேர்க்கப்பட்டன. அப்படி




வளமான விளைநிலங்களுக்காகவும் பரந்த நிலப்பரப்பிற்காகவும் 1936ல் சோவியத் ஒன்றியத்துடன் வலுக்கட்டாயமாக சேர்க்கப்பட்டதுதான் கஜகஸ்தான். கசக் என்று அறியப்படும் இந்நாட்டின் பூர்வகுடி மக்கள் பல்லாயிரம் ஆண்டுகளாக நாடோடி வாழ்க்கை முறையைப் பின்பற்றி வாழ்ந்து வந்தனர். இங்கு விவசாய நிலங்களைவிட மேய்ச்சல் நிலங்களும் கால்நடை வளர்ப்பும் அதிகம். விவசாயம் செய்து உணவு உற்பத்தி செய்யும் பழக்கம் இவர்களிடம் இருந்த போதிலும் பிற இனக்குழுக்களை போல் ஒரே நிலத்திலேயே ஆண்டாண்டு காலமாக உழுது விதைத்து அறுக்கும் பழக்கம் இவர்களிடம் இருந்தது இல்லை. ஒரு நிலம்இயற்கையாக நல்ல விளைச்சலைத் தரும்வரை அந்த நிலத்தில் விவசாயம் செய்து வாழ்வர். அதன் பின்னர் அந்த நிலத்தை விட்டு வேறு வளமான நிலத்தை அடைந்து உழுது வாழத் தொடங்குவர். அங்கும் சில காலத்திற்குப் பின் விளைச்சல் குறைந்து விட்டால் வேறு இடம் நோக்கியோ அல்லது பழைய நிலத்திற்கோ மீண்டும் இடம்பெயர்ந்து சென்று விடுவர்.

இடைப்பட்ட காலத்தில் அந்த நிலம் மீண்டும் இழந்த வளத்தினை பெற்றிருக்கும். இப்படி இயற்கையைச் சுரண்டாமல் அதன் போக்கில் புரிந்து கொண்டு அதோடு இசைந்து வாழ்ந்த இனமாகதான் கசக் இன மக்கள் இருந்துள்ளனர். ஆனால், காய்த்த மரம்தான் கல் அடி படும் என்பதுபோல் இந்த நிலப்பகுதியின் வளத்திற்காகவும் பரப்பளவிற்காகவும் பல்வேறு இனக்குழுக்களாலும் நாடுகளாலும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளனர். வரலாறு நெடுகிலும் இங்கு நடைபெற்ற படையெடுப்புகள் அதிகம். ஆனாலும் இந்நாட்டின் ஒட்டுமொத்த சூழலியலும் இம்மண்ணின் பூர்வகுடிகளின் இருப்பும் சிதைக்கப்பட்டது கடந்த சில நூற்றாண்டுகளில்தான். முதலில் இவர்களின் மேய்ச்சல் நிலங்களின் பரப்பளவைப் பார்த்து வியந்த ரஷ்யர்கள் தங்கள் ஆட்சி காலத்தில் மேய்ச்சல் நிலங்களின் ஒரு பகுதியை கோதுமை உள்ளிட்ட தானியங்கள் உற்பத்தி செய்வதற்கான விவசாய நிலங்களாக மாற்றினர். மேலும் புதிதாக ரஷ்ய குடியேற்றங்களையும் பெரும் எண்ணிக்கையில் செய்யத் தொடங்கினர். இதனால் கால்நடைகளை வளர்த்துக் கொண்டு நாடோடி குழுக்களாக வாழ்ந்து வந்த கசக் பூர்வகுடிகளின் கலாச்சாரமும் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டதோடு அந்த பகுதியின் சூழல் அமைப்பும் பெரிதும் பாதிக்கப்பட்டது. மேய்ச்சல் நிலங்கள் விவசாயத்திற்கு பயன்படுத்தப்பட்டதால் கால்நடைகளின் எண்ணிக்கைக் குறைந்து அவற்றைச் சார்ந்து இருந்த மாமிச உணவுமுறை மாறி தானியங்களின் தேவையும் அவற்றின் உற்பத்தியை உறுதி செய்ய வேண்டிய கட்டாயமும் ஏற்பட்டு மேலும் மேலும் விவசாயத்திற்காக நிலங்கள் கைப்பற்றப்பட்டன.

இந்நிலங்களில் தொடர்ச்சியாக விவசாயம் செய்ய நீராதாரம் தேவைப்பட்டது. அதன் காரணமாக பல பாசனத் திட்டங்கள் செயல்படத் தொடங்கின. இப்படி ரஷ்ய ஜார் வம்சத்தின் பிடியில் இருந்தபோது தொடங்கிய சீரழிவு என்பது அதன் தொடர்ச்சியாக அமைந்த கம்யூனிஸ்ட்களின் ஆட்சியில் உச்சம் தொட்டது. சோவியத்களின் புரட்சிகரமான கூட்டுப் பண்ணையாக்கம் ஏற்படுத்திச் சென்ற பாதிப்புகள் ஏராளம். சோவியத் அரசின் கூட்டுப் பண்ணைமுறை திட்டத்தின்கீழ் விவசாய நிலங்கள் அனைத்தும்

ஒருங்கிணைக்கப்பட்டு விவசாயிகள் அனைவரும் கூட்டாக இணைந்து உற்பத்தியில் ஈடுபடுவர். அதன் மூலம் நகரத்தின் தேவை அறிந்து உற்பத்தி செய்யவும் எளிதாக உணவு தானியங்கள் வீணாகாமல் கொண்டு சேர்க்கவும் முடியும். இதன் மூலம் விவசாயிகளுக்கும் நல்ல லாபம் கிடைக்கும் என்று கூறினர். ஆனால் அதன் பின் இருந்த மறைமுகத் திட்டம் என்பது வேறு. விவசாயிகள் தனியுடைமையை விடுத்து கூட்டுப் பண்ணை முறையில் இணையும் போது திட்டமிட்ட உற்பத்தியை உறுதி செய்ய முடியும் அறிவியல் ரீதியான நவீன விவசாய முறைகளையும் பெரிய பாசன திட்டங்களையும் ஏற்றுமதி வாய்ப்புகளையும் அதிகரிக்க முடியும் என்றும் அது நாட்டின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவும் என்றும் நம்ப வைக்கப் பட்டதே ஒழிய இத்திட்டத்தின் மூலம் விவசாயிகளின் நிலங்கள் அனைத்தும் பறிக்கப்பட்டு அவர்கள் விவசாயத் தொழிலாளர்களாக கீழிறக்கப்பட்டு நிலங்கள் அனைத்தும் அரசின் கட்டுப்பாட்டில் செல்வதோடு அந்த கூட்டுப் பண்ணைகளில் என்ன விளைவிக்க வேண்டும் எங்கு விளைவிக்க வேண்டும் எப்போது விளைவிக்க வேண்டும் எப்படி விளைவிக்க வேண்டும் என்று அனைத்து முடிவுகளும் அரசால் நிர்ணயிக்கப்படும் என்பது மறைக்கப்பட்டது.

விளையும் அனைத்தையும் எப்படிப் பிரித்துக் கொடுக்க வேண்டும் எங்கு விற்பனை செய்ய வேண்டும் என்பதையும் அரசே முடிவு செய்யும். சுருக்கமாகச் சொன்னால் விவசாயிகள் விருப்பப்படி எந்த உணவையும் விளைவிக்கவோ அல்லது தாங்கள் விளைவித்ததை தாங்களே நுகரவோ அங்கு வாய்ப்பில்லை. கரீபிய தோட்டத்துக் கருப்பின அடிமைகள்போல் தங்களுக்கு கொடுக்கப்பட்ட வேலைகளை கேள்வியின்றி செய்துவிட்டு அரசு கொடுப்பதை ஏற்றுக்கொண்டு திருப்தி அடைய வேண்டியதே விவசாயிகளின் தலைவிதியாக இருந்தது. அரசே அனைத்தையும் கட்டுப்படுத்தும் அமைப்பாகச் செயல்படும் என்று கூறினாலும் மறைமுகமாக அனைத்தும் ரஷ்யர்களின் கட்டுப்பாட்டிற்கு மாற்றப்பட்டது என்பதே உண்மை. சோவியத் ஒன்றியத்திலேயே ரஷ்யாவைவிட மிக வளமான விவசாய நிலங்களையும் விவசாயத்திற்கு தோதான பருவநிலையும் பெற்றிருந்தது உக்ரைன்தான். அதே போல்

விளையும் அனைத்தையும் எப்படிப் பிரித்துக் கொடுக்க வேண்டும் எங்கு விற்பனை செய்ய வேண்டும் என்பதையும் அரசே முடிவு செய்யும். சுருக்கமாகச் சொன்னால் விவசாயிகள் விருப்பப்படி எந்த உணவையும் விளைவிக்கவோ அல்லது தாங்கள் விளைவித்ததை தாங்களே நுகரவோ அங்கு வாய்ப்பில்லை.

அதிக பரப்பளவிலான நிலங்களும் இயற்கை வளங்களும் நிறைந்தது மத்திய ஆசியாவில் இருந்த கஜகஸ்தான். ஏற்கனவே ரஷ்ய ஜார் மன்னரின் ஆட்சி காலத்திலேயே இந்நாடுகளில் ஏற்படுத்தப்பட்ட ரஷ்ய குடியேற்றங்களை தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு கம்யூனிஸ்ட்களும் கம்யூனிஸ்ட்கள் என்று தங்களை அழைத்துக் கொண்ட ரஷ்யர்களும் தங்கள் அதிகாரத்தை உக்ரைன் கஜகஸ்தான் போன்ற பிற தேசங்களின் மீதும் அதன் இயற்கை வளங்களின் மீதும் நிலைநிறுத்த முயன்றனர்.

சோவியத் ஒன்றியத்தின் வளர்ச்சிக்கு என்ற பெயரில் சோவியத் ஒன்றியத்தை சேர்ந்த பிற இனக்குழுக்களின் நிலங்களையும் வளங்களையும் சூறையாடுவதே ரஷ்யர்களின் ரஷ்ய கம்யூனிஸ்ட்களின் திட்டமாக இருந்தது. அதற்காக கொண்டு வரப்பட்டதே கூட்டுப் பண்ணை முறை என்று உணர்ந்த பிற இனக்குழுக்கள், விவசாயிகள் அத்திட்டத்தை கடுமையாக எதிர்த்தனர். ஆனால், எதிர்த்தவர்களை எல்லாம் கொன்று குவித்து ஒரு மிகப்பெரிய திட்டமிட்ட இனப்படுகொலையையே நிகழ்த்திதான் சோவியத் ஒன்றியம் மிக சக்தி வாய்ந்த நாடாக உருப்பெற்றது என்பதுதான் வரலாறு.

### சோவியத் பஞ்சம்

ஜோசப் ஸ்டாலின் அவர்களின் ஆட்சியில் அறிமுகப்படுத்தப்பட்ட ஐந்தாண்டுத் திட்டம் என்பது மிகவும் பிரபலமான, இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளாலும் முன்மாதிரியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு திட்டம். ஆனால், ஸ்டாலின் கொண்டு வந்த முதல் ஐந்தாண்டு திட்டமே மிகப் பெரிய

இழப்புகளைக் கொண்டு சேர்த்தது. முதல் ஐந்தாண்டு திட்டத்தில் கொண்டு வரப்பட்ட ஒன்றுதான் இந்த கூட்டுப் பண்ணையாக்கம். இதன் மூலம் பாதிப்படையக் கூடிய விவசாயிகள் அனைவரும் இதற்கு கடுமையான எதிர்ப்புகளைப் பதிவு செய்தனர். அவர்கள் எக்காரணம் கொண்டும் தங்கள் நிலங்களை விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. ஆனால், தனியுடமையை ஒழித்தே ஆக வேண்டும் என்றும் தொழிற்மய வளர்ச்சியையுமே பிரதானமாகக் கொண்ட சோவியத் அரசு விவசாயிகளின் போராட்டங்களை ஒடுக்கி கூட்டுப் பண்ணை முறையை வெற்றிகரமாக செயல்படுத்துவதில் முழு முனைப்புடன் செயல்பட்டது. அதன் ஒரு பகுதியாக விவசாயிகள் மீது அதிக வரிச் சுமையை விதித்ததோடு அல்லாமல் விவசாயிகள் உற்பத்தி செய்த அனைத்துப் பொருட்களையும் அரசு பலவந்தமாக கைப்பற்றத் தொடங்கியது.

சில இடங்களில் இழப்பீடு கொடுத்தும் சில இடங்களில் அதுகூட இல்லாமலும் விவசாயிகள் உற்பத்தி செய்து வைத்திருந்த தானியங்கள், காய் கறிகள், அவர்கள் சொந்தத் தேவைக்காக வைத்திருந்த உணவு பொருட்கள் அவர்களின் செல்லப் பிராணிகளுக்கான உணவுகள் முதற்கொண்டு விவசாயிகளின் சேமிப்பில் இருந்த அனைத்து விளைபொருட்களும் அரசால் சட்டப்பூர்வமாக கொள்ளையடிக்கப்பட்டு ராணுவத்தினருக்கும் ஆட்சியாளர்களுக்கும் அதிகாரிகளுக்கும் தொழிற்சாலை பணியாளர்களுக்கும் முன்னுரிமையில் பிரித்துக் கொடுக்கப்பட்டன. அரசின் திட்டங்களை எதிர்த்தவர்கள் சிறைப்படுத்தப்பட்டு சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர். இது ஒரு பக்கம் என்றால் அரசின் திட்டங்களை எதிர்த்த விவசாயிகளும் பல லட்சம் பூர்வகுடிகளும் பட்டினி போடப்பட்டே சாகடிக்கப்பட்டனர். சோவியத் பஞ்சம் என்று அறியப்படும் இப்பஞ்சம் 1931-34 ஸ்டாலின் ஆட்சி காலத்தில் நடைபெற்றது. இதில் இறந்தவர்களின் எண்ணிக்கை சுமார் 50 லட்சத்திற்கு மேல் இருக்கலாம் என்று கருதப்படுகிறது. வரலாற்று ஆய்வாளர்கள் இதைஒரு செயற்கைப் பஞ்சமாக மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட ஒன்றாகவே கருதுகின்றனர். சிலர் இது சோவியத் ஒன்றியத்தின் தவறான கொள்கை முடிவுகளால் விளைந்த ஒன்று என்று கூறினாலும் பல வரலாற்றாளர்களும் இந்த பஞ்சத்தை திட்டமிட்ட இனப் படுகொலை என்றே பதிவு செய்கின்றனர்.



காரணம் சோவியத்தின் கூட்டு பண்ணை திட்டங்களை ஏற்க மறுத்து போராடிய உக்ரைனின் நிலவுடைமையாளர்கள் கஜகஸ்தானின் பூர்வ குடிகள் போன்றவர்களை அழித்து ஒழித்து ரஷ்யர்களின் ஆதிக்கத்தை நிலைநிறுத்தவே திட்டமிட்டே அவர்களின் உணவு ஆதாரங்கள் அனைத்தும் பறிக்கப்பட்டு அவர்களின் விளைச்சல் அத்தனையும் சுரண்டப்பட்டு பசியால் வாடி கொண்டு இருந்தவர்களுக்கு நிவாரணம் கூட அளிக்கப்படாமல் கொஞ்சம் கொஞ்சமாக உணவின்றி கொல்லப்பட்டனர் என்றே கூறப்படுகிறது. அது உண்மையும் கூட என்பதை நிரூபிக்கும் வண்ணம் சோவியத் பஞ்சத்தின் போது மடிந்த ஐம்பது லட்சத்திற்கு மேற்பட்டவர்களில் சுமார் முப்பத்தி ஒன்பது லட்சம் மக்கள் உக்ரைனியர்கள் என்கிறது தரவுகள். இறந்தவர்களில் மீதி பேர் கசக் இன மக்கள். ரஷ்யர்களின் இறப்பு விகிதம் என்பது மிக சொற்பம்.இதை வைத்தே இது திட்டமிட்ட இனப்படுகொலை என்று பலரும் கூறுகின்றனர். ரஷ்ய புரட்சிக்குப் பின் கஜகஸ்தானில் சுமார் 65% ஆக இருந்த கசக் பூர்வகுடிகளின் மக்கள் தொகை இந்த பஞ்சத்தின் முடிவில் வெறும் 38% ஆகிப் போனது. அதே சமயம் ரஷ்ய குடியேற்றங்கள் இது போன்ற நாடுகளில் அதிகரித்ததை நாம் கவனிக்க வேண்டும். இப்படி செயற்கையான பஞ்சத்தின் மூலம் அப்பட்டமான இன

அழிப்பை செய்ததோடு மட்டுமன்றி அரசின் கூட்டுப் பண்ணை முறையை எதிர்த்த விவசாயிகளை தேச விரோதிகளாகவும் சித்தரித்தது. திட்டத்தை எதிர்த்தவர்களை பெரும் நில பிரபுக்கள் என்னும் அர்த்தத்தில் 'குலக்ஸ்' என்றும் 'கசக்' என்றும் குறிப்பிட்டு அவர்கள் தங்கள் வணிக நலத்திற்காகவும் பெரும் லாபத்திற்காகம் அரசின் திட்டங்களை எதிர்ப்பதாகவும் இதனால் நாட்டின் வளர்ச்சியும் சாதாரண விவசாயிகளின் வாழ்வாதாரமும் பாதிக்கப்படுவதாக பிரச்சாரம் செய்தது சோவியத் அரசு. என்ன இதை எங்கோ கேட்டதுபோல் இருக்கிறதா? ஆம் டெல்லியின் எல்லையில் மூன்று விவசாயச் சட்டங்களையும் எதிர்த்து போராடிய விவசாயிகளை மோடி அரசும் இதே போன்றே அவர்கள் விவசாயிகள் இல்லை என்றும் பெரும் நில பிரபுக்கள் என்றும் இடைத்தரகர்கள் என்றும் தேச பிரிவினையாளர்கள் என்றும் பலவாறு கொச்சைப்படுத்தியது. உலகம் முழுவதும் சர்வாதிகாரிகளின் குரல் ஒரே மாதிரிதான் ஒலிக்கும் என்பதில் சந்தேகமில்லை. சித்தாந்த வேறுபாடுகள் கடந்து சர்வாதிகாரத்தின் செயல்பாடுகள் அனைத்து காலகட்டத்திலும் அனைத்துப் பகுதிகளிலும் ஒன்று போலவே இருக்கும். அன்று ஒரு ஸ்டாலின் இன்று ஒரு மோடி. அவ்வளவுதான்!

### ஆறாம் அறிவும் ஆரல் ஏரியும்

ஆரல் கடல் என்பது மத்திய ஆசியாவில் உள்ள கஜகஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் நாடுகளுக்கு இடையே இருந்த மிக பெரிய உப்பு நீர் ஏரியாகும். நியோஜின் காலத்தின் இறுதியில் (2.3 கோடி முதல் 26 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு) உருவான இந்த ஏரி, கடல்போல் பிரம்மாண்டமானதாக இருந்துள்ளது. இதன் காரணமாகவே இந்த ஏரியை 'ஆரல் கடல்' என அழைத்துள்ளனர். 68,000 சதுர கிலோ மீட்டர் பரப்பளவை கொண்ட இந்த ஏரி, உலகின் 4வது பெரிய ஏரி எனவும் அழைக்கப்பட்டுள்ளது.

அமு தாரியா சிர் தாரியா என்ற இரண்டு பெரிய ஆறுகளில் இருந்து கிடைக்கப் பெற்ற நீரைக் கொண்டு தான் ஆரல் கடல் வாழ்ந்து வந்தது. 1960களில் சோவியத் யூனியன் தனது நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு இங்கிருந்து நீரை எடுத்துக்கொள்ள ஆரம்பித்ததன் விளைவு,

அமு தாரியா சிர் தாரியா நதிகளின் குறுக்கே சிறு சிறு தடுப்பணைகள் கட்டப்பட்டு பாசன வாய்க்கால்கள் மூலம் விவசாயத்திற்கு திருப்பப்பட்டன. இதன் காரணமாக ஆரல் ஏரிக்கு வரும் நீர் படிப்படியாக குறைந்து ஒரு கட்டத்தில் நின்றே போனது.

அதன் பரப்பளவு சுருங்கத் தொடங்கியது. ஐந்தாண்டுத் திட்டத்தின் விளைவாக 1930களிலேயே எப்படி கஜகஸ்தான் உக்ரைன் போன்ற நாடுகளின் விவசாய நிலங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு பெரிய அளவில் இயந்திரங்களைக் கொண்டும் ரசாயனங்கள் கொண்டும் நவீன தொழிற்மய வேளாண்மையில் சோவியத் ஈடுபடத் தொடங்கியது என்று பார்த்தோம். இதற்காக பல பெரிய பாசன திட்டங்களையும் அப்போதிருந்தே திட்டமிட்டு செயல்படுத்தத் தொடங்கி இருந்தனர். அதில் ஒன்றுதான் ஆரல் ஏரிக்கு வரும் நீரை திருப்பி பாசனத்திற்கு பயன்படுத்துவது.

பாலைவனமாகவும் மேய்ச்சல் நிலங்களாகவும் இருந்த கஜகஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் நாட்டின் பெரும்பாலான நிலங்களைப் பாசன வசதிகள் மூலம் விவசாய நிலங்களாக மாற்றும் முயற்சி 1930 முதலே தொடங்கி 1960ல் வேகமெடுத்தது. அமு தாரியா சிர் தாரியா நதிகளின் குறுக்கே சிறு சிறு தடுப்பணைகள் கட்டப்பட்டு பாசன வாய்க்கால்கள் மூலம் விவசாயத்திற்கு திருப்பப்பட்டன. இதன் காரணமாக ஆரல் ஏரிக்கு வரும் நீர் படிப்படியாக குறைந்து ஒரு கட்டத்தில் நின்றே போனது. சரி அப்படி திருப்பப்பட்ட நீரைக் கொண்டு என்னதான் விவசாயம் செய்தனர் என்று கேட்டால் வெள்ளைத் தங்கம் என்று அறியப்படும் பருத்தியை உற்பத்தி செய்யவே இத்தனை ப்ரயாசைப் பட்டுள்ளனர். உணவு உற்பத்திக்கு கூட முக்கியத்துவம் தராமல் பணப்பயிர் உற்பத்திக்காக அதன் மூலம் தங்கள் உலக வல்லரசுக் கனவுகளை மெய்ப்படுத்திக் கொள்ள, தெரிந்தே இந்த சூழலியல் சீரழிவை சோவியத்கள் முன்னெடுத்தனர். 1961–70

காலக்கட்டத்தில் ஆரல் ஏரியின் நீர்மட்டம் ஆண்டுக்கு சுமார் 20 cm என்ற அளவில் குறையத் தொடங்கி 70களில் ஆண்டுக்கு 50-60cm என்றும் 80களில் ஆண்டுக்கு சுமார் 80-90 cm என்ற அளவில் குறையத் தொடங்கியது. இந்தப் பாசனத் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதற்கு முன்பு ஆரல் ஏரி கடல் மட்டத்திலிருந்து 53 மீ உயரத்தில் இருந்தது. அதே 2010ல் எடுக்கப்பட்ட ஆய்வில் ஆரல் ஏரி இரண்டாகப் பிரிந்து பெரிய ஆரல் ஏரி கடல்மட்டத்திலிருந்து 27 மீ உயரத்திலும் சிறிய ஆரல் ஏரி 43 மீ உயரத்திலும் இருந்தது கண்டறியப்பட்டது.

உலகின் நான்காவது மிகப்பெரிய ஏரியாக இருந்த ஆரல் ஏரியின் பரப்பளவில் இன்று 10% கூட மீதம் இல்லை. சோவியத்களின் தவறான கொள்கை முடிவுகளால் ஒரு மிகப்பெரிய உப்பு நீர் ஏரியும் அதன் சூழலியலும் மீன்வளமும் உயிர்ப்பன்மையமும் அந்த ஏரியை நம்பி இருந்த பறவை இனங்களும் பூர்வகுடி மக்களின் வாழ்வாதாரமும் முற்றிலும் பாதிக்கப்பட்டது. ஆனால், இந்த விளைவுகள் எல்லாம் ஏற்படும் என்று நன்கு தெரிந்தேதான் இத்திட்டங்களை சோவியத் அரசு செயல்படுத்தியது. 1960களில் இத்திட்டம் முழு வீச்சில் செயல்பத்ட தொடங்கும்போதே அது குறித்த ஐயங்கள் எழுந்தன. ஆனால் சோவியத் அமைச்சர்களையோ பொலிட்பீரோ உறுப்பினர்களையோ எதிர்க்கும் துணிச்சல் அங்கு யாருக்கும் இல்லை.

சோவியத் உயர்மட்ட அதிகாரிகள் கூற்று என்னவாக இருந்தது என்றால் எப்படியும் ஆரல் ஏரியில் சேரும் நீர் ஆவியாகதான் போகிறது. அதனால் யாருக்கும் எந்த பலனும் இல்லை என்று கூறியவர்கள் கட்டமைத்த பாசன வாய்க்கால்கள் வழியாக பாய்ந்த நீரில் சுமார் 60% மேல் ஆவியானதுதான் மிச்சம். ஆனால், ஆரல் ஏரியைக் கொன்றாலும் சோவியத்கள் தங்கள் பருத்தி உற்பத்தியில் எண்ணியதைச் சாதித்துக் காட்டினர். உஸ்பெகிஸ்தான் பருத்தி உற்பத்தியில் முதன்மையான நாடாக உருப்பெற்று லெனின் அவர்களின் கனவான பருத்தி உற்பத்தியிலும் ஏற்றுமதியிலும் சோவியத் ஒன்றியத்தை முதல் இடத்திற்குக் கொண்டு சென்றது. அன்றைய காலகட்டத்தில் பருத்தி மிக சக்தி வாய்ந்த பொருளாக விளங்கியதே அதற்கு காரணம். மனிதர்கள் உடுத்தும் ஆடைகளுக்காக ஒரு நிலத்தின் சூழல் அமைப்பே முற்றிலும் சீரழிக்கப்பட்டு ரசாயனங்களை கொட்டி பூச்சிக் கொல்லிகளை ஆறாக ஓடவிட்டு அதன் மூலம் அந்த பகுதியின் சூழலும் நீராதாரமும் உணவு இறையாண்மையும் உயிர்ப்பன்மையமும் பூர்வகுடி மக்களும் குறிப்பாக உழைக்கும் வர்க்கமும் பாதிக்கப்பட்டு இருப்பதை எங்காவது காண முடியுமா? அதிலும் இவற்றை எல்லாம் முன்னின்று நடத்தியது கார்ப்பரேட் முதலாளிகளோ அமெரிக்க ஏகாதிபத்தியமோ அல்ல மக்கள் புரட்சியின் விளைவாக அமைந்த ஒரு பாட்டாளி வர்க்க அரசு என்றால் நம்ப முடிகிறதா?.

மார்க்சோ ஏங்கல்சோ இயற்கை குறித்து பாராமுகமாக இருந்தார்களா என்றால் இல்லை. அவர்கள் போதுமான அளவு இயற்கை குறித்தான புரிதலோடும் இயற்கையுடன் இயைந்து வாழ வேண்டியதன் அவசியம் குறித்தும் வலியுறுத்தியே சென்றிருக்கின்றனர். தொழில் மயமாக்கப்பட்ட விவசாயத்தால் மண் வளர்சிதை மாற்றத்தில் ஏற்பட்ட பிளவு பற்றி மார்க்ஸ் எழுதினார். உணவு அல்லது நார்ச்சத்து உள்ள நைட்ரஜன், பாஸ்பரஸ் மற்றும் பொட்டாசியம் போன்ற அத்தியாவசிய மண் ஊட்டச்சத்துக்கள் நூற்றுக் கணக்கான, ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் மக்கள் அடர்த்தியான நகரங்களுக்கு



அனுப்பப்பட்டன. அங்கு அவை கழிவுகளாகி, நகர்ப்புற மாசுபாட்டை அதிகரிக்கின்றன. இச்சத்துக்கள் மண்ணிற்கு திரும்பக் கிடைக்காமல் இழக்கப்படுகின்றன என்று மார்க்ஸ் கூறினார். முதலாளித்துவத்திற்கு அப்பால் ஒரு பகுத்தறிவு சமுதாயத்தை உருவாக்குவதற்கு அடிப்படையாக, மனிதர்களுக்கும் இயற்கைக்கும் இடையிலான வளர்சிதை மாற்றத்தின் பகுத்தறிவு ஒழுங்குமுறையின் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

ஆனால் மக்கள் புரட்சியின் விளைவாக அமைந்த முதல் கம்யூனிச அரசுகூட மார்க்சியத்தின் அடிப்படைகளைப் புரிந்து அதன் அடிபற்றி நடந்ததா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். கம்யூனிசத்தின் அடிப்படையே மக்கள் தான். தனியுடமையால் பாதிக்கப்பட்டு, தங்கள் இருத்தலுக்காக தங்களைச் சுற்றி உள்ள இயற்கை வளங்களை பயன்படுத்த இயலாமல் முதலாளிகளிடமும் நிலப்பிரபுக்களிடமும் அடிமைப்பட்டிருந்த மக்களை அடிமையிலிருந்து விடுவித்து எல்லாருக்கும் எல்லாம் என்பதை உறுதி செய்ய வேண்டிய இடத்தில் இருந்த கம்யூனிஸ்ட்கள் மக்களை மறந்து அரசையும் அரசின் உச்சியில் இருந்தவர்களின் வல்லரசு கனவுகளையும் நிறைவேற்றுவதற்காக முதலாளிகளும் நில பிரபுக்களும் செய்த அதே அடக்குமுறைகளையும் அடிமைத்தனங்களையும் தேச நலனின் பெயரில் கம்யூனிஸத்தின் பெயரில் அரங்கேற்றியதே நகை முரண்.

மேலே குறிப்பிட்ட கூட்டுப் பண்ணைத் திட்டங்களும்,தொழில்மைய வேளாண்மையும், ஆரல் ஏரியும், இனப்படுகொலைகளும் சிறு உதாரணங்களே. இன்னும் சோவியத் காலத்தில் நடைபெற்ற தொழில் வளர்ச்சி, பெரிய பாசன திட்டங்கள், கச்சா எண்ணெய் உள்ளிட்ட வற்றிற்கான இயற்கை வளச் சுரண்டல்கள், விண்வெளி ஆராய்ச்சிகள், போர்கள், ஆயுத குவியல்கள், அணு ஆயுத சோதனைகள், அறிவியல் அக்கப்போர்கள் என்று இயற்கையை நாசமாக்கிய நடவடிக்கைகள் ஏராளம். முதலாளித்துவத்திற்கு மாற்றாக தங்களைக் கூறிக்கொண்டவர்கள் அதே முதலாளிகள் ஏற்படுத்திய இயற்கை சீரழிப்புக்களுக்கு சற்றும் குறையாமல் போட்டி போட்டுக் கொண்டு இயற்கையை பாழ்படுத்தி உள்ளனர். அதன் மூலம் மனித இனத்தையும் அவர்கள் யாருக்காக பாடுபடுவதாக சொல்லிக் கொண்டார்களோ அதே பாட்டாளி மக்களையும் சுரண்டும் வேளையையே கம்யூனிச அரசுகள் செய்து வந்துள்ளன. உலகமயமாக்கலுக்கு பின்னரே உலகம் முழுவதும் கம்யூனிஸ்ட்கள் வீழ்ந்ததாக சொல்வார்கள் ஆனால் எப்பொழுது முதலாளித்துவ ஏகாதிபத்திய நாடுகள் கைக்கொண்ட பொருளாதார குறியீடுகளை வளர்ச்சி படிநிலைகளை அடிப்படையாக ஏற்று அமெரிக்காவோடு போட்டி போட்டு அந்த பொருளாதார குறியீடுகளில் அமெரிக்காவை வீழ்த்தி முதல் இடம் பிடிக்க வேண்டும் என்றும் அதையே வளர்ச்சி முழக்கமாகவும் ஏற்று செயல் படத் தொடங்கியதோ அன்றே கம்யூனிசம் வீழ்ந்து விட்டது.

**மக்கள் புரட்சியின் விளைவாக அமைந்த முதல் கம்யூனிச அரசுகூட மார்க்சியத்தின் அடிப்படைகளைப் புரிந்து அதன் அடிபற்றி நடந்ததா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.**

அதன் பின்னர் நடந்ததெல்லாம் வல்லரசு கனவுகளை சுமந்து திரிந்த சர்வாதிகார ஆட்சிதான். உண்மையில் ஒரு அசலான கம்யூனிச அரசு வரலாற்றில் இன்னும் உருப்பெறவே இல்லை. கம்யூனிசம் ஒரு கனவாகவும் கருத்தியலாகவும் மட்டுமே நிலைத்திருக்கிறது. இதுவரை வரலாற்றில் உருப்பெற்ற கம்யூனிச அரசுகள் எல்லாம் இன்னொரு முதலாளித்துவ போட்டி அரசுகளே! கம்யூனிசம் மக்களுக்கானது, மக்கள் இயற்கையின் ஓர் அங்கம். மக்களின் மேன்மைக்காக சிந்திப்பவர்கள் இயற்கையின் மேன்மைக்காக அதை பாதுகாப்பதற்காகவே சிந்திக்க வேண்டும். அப்படி சிந்தித்துச் செயலாற்றும் போதுதான் ஓர் உண்மையான கம்யூனிச அரசு வரலாற்றில் உருப்பெறும்.



# அதானியின் மெகா நிலக்கரி ஊழல்

**பிரபாகரன் வீரஅரசு**

**2014ம்** ஆண்டு அதானியின் நிறுவனம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகதிற்கு 21,000 டன் தரம் குறைந்த நிலக்கரியை விற்றதன் மூலம் மெகா ஊழலை செய்திருக்கிறது இதனை OCCRP அறிக்கை அம்பலப்படுத்தியிருக்கிறது. இந்த ஊழலினால் தமிழ்நாட்டு அரசிற்கு பல்லாயிரம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டதோடு, அனல் மின் நிலையங்களைச் சுற்றி வசிக்கும் மக்களின் ஆரோக்கியமும் அப்பகுதி சுற்றுச்சூழலும் பல மடங்கு பாதிக்கப்பட்டுள்ளது.

நமது நாட்டின் பெரும்பான்மையான மின் உற்பத்தி, அனல் மின் நிலையங்களில் இருந்தே உற்பத்தி செய்யப்படுகிறது. ஒரு அனல் மின் நிலையம் நிலக்கரி, பழுப்புநிலக்கரி, எண்ணெய், வாயுக்கள் போன்ற ஏதோ ஒரு புதைப்படிம ஆற்றலைப் பயன்படுத்தி அதை எரித்து அதிலிருந்து உண்டாகும் வெப்பத்தின் மூலம் நீரினைச் சூடாக்கி அதிலிருந்து வெளியேறும் வெப்ப ஆவியின் மூலம் டர்பைனை இயக்கச் செய்து மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது. இந்த வகையில் நிலக்கரி அனல் மின் நிலையத்தில் இருந்து மின்சார ஆற்றல் உற்பத்தியாக அதிக அளவு நீரும் நிலக்கரியும் தேவைப்படும்.

உதாரணத்திற்கு ஒரு 1000 மெகாவாட் அனல் மின் நிலையம் ஒரு நாளைக்கு இயங்க சுமார் 96 கோடி லிட்டர் தண்ணீரும், 9000 டன் நிலக்கரியும் தேவை. 9000 டன் என்பது

ஒரு முழு ரயிலின் ( 90 பேட்டிகள் உள்ள ரயிலில் ஒரு பெட்டிக்கு 10 டன் நிரப்பப் பட்டால்) கொள்ளளவு ஆகும். 1000 மெகாவாட் அனல் மின் நிலையத்திற்கு ஒரு நாளைக்கு 9000 டன் நிலக்கரி தேவை என்றால் தமிழ்நாட்டில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்குக்கீழ் இயங்கும் 5120 மெகா வாட் அனல் மின் நிலையங்கள் சராசரியாக 70% திறனில் இயங்குவதாக வைத்துக்கொண்டால் TANGEDCO வின் அனல் மின் நிலையங்கள் இயங்குவதற்கு மட்டும் ஒரு நாளைக்கு மட்டும் சுமார் 32,000 டன் நிலக்கரி தேவை.

இந்த மொத்த நிலக்கரித் தேவையையும் இந்திய நிலக்கரி கொண்டே பூர்த்தி செய்துவிட முடியும். ஆனால், இந்திய நிலக்கரிகளில் ஆற்றல் திறன் (Calorific Value) குறைவு என்பதனாலும் இந்திய நிலக்கரி அதிக நச்சு சாம்பலினை உற்பத்தி செயய்வதனாலும் நல்ல தரமான வெளிநாட்டு நிலக்கரியை இறக்குமதி செய்து அதை இந்திய நிலக்கரியுடன் கலந்து நமது அனல் மின் நிலையங்களில் பயன்படுத்தப்படுகிறது. உதாரணத்திற்கு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகதினால் இந்த ஆண்டு புதிதாக 800MW அளவில் துவங்கப்பட்டிருக்கும் வட சென்னை அனல் மின் நிலையம் கட்டம் IIIல் (NCTPS Stage III, super critical) தரம் குறைந்த 30% இந்திய நிலக்கரியுடன் தரமான 70% வெளிநாட்டு நிலக்கரி சேர்த்து எரிக்கப்படுகிறது. இந்த ஒரு அனல் மின் நிலைய அலகிற்காக மட்டும் சுமார் 13



**தரம் குறைந்த இந்தோனேசிய நிலக்கரியை, டன் வெறும் 28 டாலருக்கு வாங்கி தரம் உயர்ந்ததென ஏமாற்றி சராசரியாக ஒரு டன் 86 டாலருக்கு தமிழ்நாட்டு அரசிடம் அதானி நிறுவனம் விற்றுள்ளது.**

லட்சம் டன் நிலக்கரி வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது.

இப்படி மக்களின் ஆரோக்கியத்தைக் கருத்தில் கொண்டு உள்நாட்டு நிலக்கரியில் இருக்கும் நச்சு சாம்பலின் தாக்கத்தைக் குறைக்க வேண்டும் என்று வெளிநாட்டு நிலக்கரியை அதிக விலை கொடுத்து இறக்குமதி செய்து பயன்படுத்த முயன்றிதில்தான் இந்த மெகா ஊழலை அதானி நிறுவனம் செய்திருக்கிறது.

2014ம் ஆண்டு அதானி நிறுவனம் 21,00,000 டன்கள் தரமான வெளிநாட்டு நிலக்கரியை 32 தவணையாக இறக்குமதி செய்ய தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தோடு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டது. இதன்படி அதானி நிறுவனம் இருக்குமதி செய்யும் நிலக்கரியின் தரம் 6000 கலோரி இருக்க வேண்டும், ஆனால், 3500 கலோரியே உள்ள தரம் குறைந்த இந்தோனேசிய நிலக்கரியை, டன் வெறும் 28 டாலருக்கு வாங்கி தரம் உயர்ந்ததென ஏமாற்றி சராசரியாக ஒரு டன் 86 டாலருக்கு தமிழ்நாட்டு அரசிடம் அதானி நிறுவனம் விற்றுள்ளது. அதானி நிறுவனம். இதனால் கிட்டத்தட்ட 3000 கோடி ருபாய் தமிழ்நாடு அரசு நஷ்டம் அடைந்துள்ளது.

இதனால் பொருளாதார பாதிப்புகள் மட்டும் இல்லாமல் மக்களின் ஆரோக்கியமும் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. குறைந்த கலோரி என்பதால் அதிகளவு நிலக்கரியை எரித்திருக்க வேண்டிருக்கும். TANGEDCO இயக்கும் அனல் மின் நிலைங்களின் அருகில்



வசிக்கும் வட சென்னை, மேட்டூர் மற்றும் தூத்துக்குடி மக்களுக்கு எண்ணற்ற உடல் உபாதைகள் இதன் காரணமாக ஏற்பட்டிருக்கக் கூடும். டெல்லியில் நுண்துகள் கலந்த காற்றை சுவாசிப்பதனால் மக்கள் தங்களின் ஆயுட்காலத்தில் 9 ஆண்டுகளை இழப்பதாக *AQLI* ஆய்வறிக்கை தெரிவிக்கிறது.

தரம் குறைந்த நிலக்கரியைப் பயன்படுத்தியதன் விளைவாக ஏற்பட்ட *PM2.5* நுண்துகள் பெருக்கத்தினால் வட சென்னை மக்களும் தங்களில் ஆயுட் காலத்தில் 5 - 6 ஆண்டுகளை இழந்திருக்கக்கூடும். ஏற்கனவே இந்த அனல் மின் நிலையங்கள் அனைத்தும் தொடர்ந்து விதிமீறல்கள் செய்து வருகின்றன. வரையறைக்கப்பட்ட பாதுகாப்பான அளவுகளைவிட 6 - 7 மடங்கு அதிக காற்று மாசினை ஏற்படுத்துகின்றன, காற்று மாசினைக் கட்டுபடுத்தும் *FGD (Flue Gas Desulfurizer)* கருவி கட்டாயம் புகைபோக்கியின் பொருத்தப்பட வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டு இருந்தும் இதனால்வரை தமிழ்நாட்டில் அரசால் நடத்தப்படும் எந்த அனல் மின் நிலையத்திலும் காற்று மாசைக் கட்டுப்படுத்தும் *FGD* கருவி பொருத்தப் படவில்லை.

மக்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கத் தேவைப்படும் *FGD* கருவிகளை பொருத்த தேவையான நிதி இல்லை என்பதனை சாக்காக சொல்லும் இந்த அனல் மின் நிலையங்கள் தான் தற்போது அதானியிடம் இருந்து அதிக பணம் கொடுத்து தரம் குறைந்த நிலக்கரியை வாங்கி மீண்டும் மக்களின் ஆரோக்கியத்தையும் உயிரையும் ஆபத்தில் தள்ளியுள்ளது. தமிழ்நாடு அரசு உடனடியாகத் தலையிட்டு நடந்திருக்கும் இந்த மெகா ஊழல் தொடர்பாக வழக்குப் பதிவு செய்து விசாரிக்க வேண்டும். அதானி நிறுவனத்திற்கு மேற்கொண்டு எந்த வகையான மின் திட்டங்களையும் வழங்கக் கூடாது. தமிழ்நாட்டில் செயல்படும் எல்லா அனல் மின் நிலையத்திலும் *FGD* கருவி உடனடியாகப் பொருத்தப்பட வேண்டும். அனல் மின் நிலையத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் மக்களுக்கு மருத்துவ பரிசோதனை மேற்கொள்ள வேண்டும்.

Published and printed by G. Sundarrajan on behalf of Poovulagin Nanbargal, Printed at Meera offset Printers, 104 V.R Pillai Street, Triplicane, Chennai 600005. Published from Old No. 29/2, New No 6/2 12th Street, Vaigai Colony, Ashok pillar, Chennai - 600083. Editor G. Sundarrajan




நன்றி: DownToEarth

Poovulagu Tamil Monthly Registered with the Registrar of Newspapers for India Under No. TNTAM/2016/70903




CLASSIC POLO
C&C - SIGNATURE

CP BRO
SONO DIVERSO

**CLASSIC FASHIONS DIVISION** (A Unit of Royal Classic Mills Pvt. Ltd.,)

Sri Brindavan, S.F. No: 302/1, Andipalayam Post, Tirupur - 641 687, India. Ph: +91 421 7170000. www.rcg.in

Customer feedback: support@classicpolos.com or call 93633 93633, Corporate Order: 93623 20200, 99449 63145

AVAILABLE AT ALL LEADING APPAREL RETAIL OUTLETS

**Franchisee Enquiries Contact : 93415 55582 / 74398 09093 I Trade Enquiries Contact : 98499 37777**

Follow us on : www.classicpolos.com